வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET e paper
kalmunainet.com






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
சார்வரி வருடம் தை ஒன்று (24.01.2021) இதழ் : 02

# கொதிநிலையில் மட்டு.மேய்ச்சல் தரை விவகாரம்

## தமிழ் அரசியல் வாதிகள் மீது தமிழ் மக்கள் சீற்றம்

### கிழக்கை மீட்பதாகக் கூறுவோர் தெற்குடன் சங்கமமா?

**மேய்ச்சல் தரையினை பாவிக்கவும் பண்ணையாளரை பாதுகாக்கவும் மன்று உத்தரவு**

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைவிவகாரம் கொதிநிலைக்கு மாறியுள்ளதாகத் தெரிகிறது.

பாரம்பரியமாக மேய்ச்சல்தரையினை பாவித்துவந்த பண்ணையாளர்கள் எதிர்நோக்கிவருகின்ற பிரச்சினைகள் குறித்து ஊடகங்கள் பரவலாக தகவல்களை வெளியிட்டுவந்தபோதிலும் தமிழ்அரசியல்வாதிகள் சிலர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றி மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தி நிலவுகின்றது.

த.தே.கூட்டமைப்பைசேர்ந்த பல அரசியல்வாதிகள் வழமை போல்அந்த இடத்திற்குச்சென்று பார்வையிட்டதுடன் ஊடகஅறிக்கையையும் விடுத்தனர்.

அதற்குள்ளும் சிலர் ஒருபடி மேலேசென்று இந்தவிடயத்தை பிரதமர் வரை எத்திவைத்ததாகவும்

12

## காரைதீவு பிரதேச சபையில் கனல் பறக்கும் வாதப்பிரதிவாதம்!

**அமளி துமளி;அமர்வு ஒத்திவைப்பு; உறுப்பினர் இராஜினாமா?**



( நமது நிருபர்)

காரைதீவு பிரதேசசபை அமர்வில் உபதவிசாளருக்கு எதிராக பிரேரிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை பிரேரணையின் போது உறுப்பினர்கள் கனல்பறக்கும் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையினால்

12

## காரைதீவில் தொற்றுக்குள்ளான மாணவர்கள் சிகிச்சைக்காக அனுப்பிவைப்பு

**தொற்று 58 ஆகஉயர்வு; மாவடிப்பள்ளியில் சுகாதார ஊழியருக்கு கொரோனா.**

**காரைதீவு சுகாதார வைத்தியஅதிகாரி தஸ்லிமா கூறுகிறார்.**

( வேதசகா)

காரைதீவில் நேற்று கொரோனத் தொற்றுக்குள்ளான இரு மாணவர்களையும் அவரது தந்தையார் சிகிச்சைபெற்றுவரும் பெரியகல்லாறு கொரோனாச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைத்துள்ளோம் என்று காரைதீவு பிரதேசசுகாதார வைத்திய அதிகாரி டொக்டர்தஸ்லிமாபஷீர்தெரிவித்தார்.

அதேவேளை காரைதீவு எல்லைக்



12

# ஜனாதிபதியின் ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு!





**உள்ளூர் அரசியல்முகவர்களின் கைங்கரியமா? தலையிட்டு நீதி வழங்குங்கள். ஜனாதிபதியிடம் கல்முனை சங்கரத்ன தேரர் உறுப்பினர் ராஜன் வேண்டுகோள்.**

(வேதசகா)

ஜனாதிபதியின் 1லட்சம் வேலைவாய்ப்புத் திட்டம் ஏழைஎளிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அதற்கு உள்ளூர் அரசியல்முகவர்கள்

02

## இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினவிழா பெப்.4இல்

( வேதசகா)

இலங்கையின் 73 ஆவது தேசிய சுதந்திர தின வைபவம் இம்முறை சுகாதார வழிமுறைகளை முழுமையாக பின்பற்றிய நிலையில் எவ்வித குறைப்பாடுகளுமின்றி தேசத்தின் அபிமானத்தை காக்கும் வகையில் வழமை

போன்று கம்பீரமான முறையில் நடத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளரும் தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருமான ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு) தெரிவித்தார்.

**இப்படிச் சொன்னாரா ஜனாதிபதி?**

## ஸ்ரீதரன் முழக்கம்

**குருந்தூர்மலை சம்பவம் இன அழிப்பின் ஓர் அடையாளம் என்கிறார்**

( வேதசகா)

பிரபாகரனைத் தானே சுட்டு இழுத்துக் கொண்டு வந்து போட்டதாக ஜனாதிபதியே வெளிப்படையாகச் சொல்லியுள்ளார். அவரது இந்தக்



02

**பிசிஆர் வதந்தியால் ஏற்பட்ட பதட்டத்தின்போது...**



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைகோட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்க்கு கொரோனா பிசிஆர் சோதனை இடம்பெறுவதாக கடந்த செவ்வாயன்று பரவிய வதந்தியையடுத்து அங்கு பதட்டம் நிலவியது. இதனையடுத்து பாடசாலைகளுக்குள் நுழைந்து தங்கள் பிள்ளைகளை பலவந்தமாக பெற்றோர் அழைத்துச் சென்றனர்.இச் சம்பவத்தால் சம்மாந்துறை பிரதேசப் பாடசாலைகளில் அல்லோலகல்லோல நிலைமை ஏற்பட்டது. அதன்போதான படம்.

## ஜனாஸா எரிப்பால் முஸ்லீம்கள் மருத்துவமனைக்கு செல்ல அச்சம்



(வேதசகா)

கொரோனாவினால் உயிரிழந்தால் தங்களின் உடல்கள் தகனம் செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக முஸ்லீம் மக்கள் மருத்து

02

## கிழக்கில் போட்டிபோட்டு பரவுகிறது கொரோனா!!

( வேதசகா)

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று போட்டிபோட்டு பரவிவருகிறது.

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத்தொற்றுக்களின் எண்ணிக்கை 2100ஐ தாண்டியுள்ளது. அங்கு இன்றைய தினம்(24) 2177 ஆகியது.

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் இளைஞர் கழக சம்மேளனம் புனரமைப்பு!

**வேதசகா**



திருக்கோவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளன 2021 ம் ஆண்டுக்கான புனரமைப்புக் கூட்டமானது திருக்கோவில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் பி.பாகரன் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.அங்கு புதிய நிர்வாக தெரிவும் இடம்பெற்றது.

இதில் அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி முபாறக்அலி அக்ககரைபற்று பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் திருக்கோவில் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் யோ. தனுஷான் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது20பேர்கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதோடு திருக்கோவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராக கே.டினேஸ்காந்த் பிரதிதலைவராக எஸ்.மிதுர்ஜன் உபசெயலாளராக செல்வி. பு.சாதனா பொருளாளராக கே. சதுர்ஜன் அமைப்பாளராக ச. டிலக்ஷன் பிரதி அமைப்பாளராக ளு.கவிதாஸ் மற்றும் உபசெயலாளர்களாக விளையாட்டுத் துறை கே. பவிதன் கலாச்சாரம் செல்வி எஸ். சாருமதி ஊடகம் செல்வி எம்.நித்தியா முயற்சியாண்மை வி.லக்ஷான் கல்வித் துறை செல்வி எம்.பிரதீபா சுற்று சூழல் ரி.கேதுஜன் தேசியசேவை ரி. லதீபன் நிதி செல்வி. கே. திரிஷா ஆகியோர் வருகை தந்த இளைஞர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

திருக்கோவில் பிரதேசத்தின் வினைத்திறனான இளைஞர் செயற்பாடுகளுக்கு அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான தருணம் என பிரதேசசெயலாளர் கஜேந்திரன் குறிப்பிட்டார்.

# கிழக்கில் போட்டிபோட்டு பரவுகிறது கொரோனா!!

அதேவேளை கல்முனைப்பிராந்தியம் 1000 ஐத் தாண்டி 1126 ஆகியது.

கல்முனைப்பிராந்தியத்துள் வரும் அக்கரைப்பற்று பிரதானசந்தை மூலமாக ஏற்பட்ட உபகொத்தணிப்பரவலும் 1000த்தாண்டியது. அந்த உப கொத்தணியில் இதுவரை 1088 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

பின்னணியில் மட்டக்களப்பும் திருகோணமலையும் யாரை யார் முந்துவது என்ற போர்வையில் தினம் தினம் தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

கடந்த மார்ச் மாதமிருந்து பேலியகொட மூலமாக இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 1126பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 541 பேரும் திருமலை மாவட்டத்தில் 383 பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 104 பேருமாக 2154 பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர்.

மேலும் வெளிநாடு மினுவாங்கொட கந்தக்காடுகொத்தணி வெலிசற கடற்படைமுகாம் போன்ற மூலங்களிலிருந்து மீதி 23 தொற்றுக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

**13மரணங்கள்!**

இதுவரை கிழக்கில் சம்மாந்துறை ஒலுவில் சாய்ந்தமருது அட்டாளைச்சேனை வவுணதீவு காத்தான்குடி நாவிதன்வெளி ஆலையடிவேம்பு உகனை காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பிலுமாக மொத்தம் 13 கொரோனா மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

கல்முனைப்பிராந்தியத்தில் 06பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 06பேரும் அம்பாறைப்பிராந்தியத்தில் ஒருவருமாக இந்த 10 மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. இத்தரவுகளை கிழக்குமாகாண சுகாதாரத்திணைக்களம் வெளியிட்டுள்ளது.

**கல்முனை பிராந்தியத்தில் 1126..**

கல்முனைப்பிராந்தியத்தில் 1126ஆக தொற்றுக்கள் இனங்காணப்பட்டிருக்கின்றன. இப்பிராந்தியத்துள்வரும் அக்கரைப்பற்றுக் கொத்தணியில் இதுவரை 1088 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதில் அக்கரைப்பற்று 313 தொற்றுக்கள் அடுத்ததாக கல்முனை தெற்கு 305 அட்டாளைச்சேனை 93 பொத்துவில் 85 சாய்ந்தமருது 70 காரைதீவு 58 ஆலையடிவேம்பு 41 கல்முனை வடக்கு 38 சம்மாந்துறை 34 இறக்காமம் 24 நிந்தவூர் 32 நாவிதன்வெளி 18 திருக்கோவில் 15 என தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த பல நாட்களாக காரைதீவுப்பிரதேசத்தில் 48ஆக இருந்த தொற்று நேற்று இனங்கண்ட 04பேருடன் 58 ஆக உயர்ந்துள்ளது.

கல்முனை மாநகரில் கல்முனை தெற்கில் 305பேரும் சாய்ந்தமருதில் 70பேரும் கல்முனை வடக்கில் 38பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். சாய்ந்தமருதில் ஒரு மரணம் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனையின் 11 கி.சே.பிரிவுகளில் முடக்கச்செயற்பாடு 19வது நாளாக அமுலில்உள்ளது.

**மட்டக்களப்பில் 541...**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 541ஆக உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் கூடியதாக காத்தான்குடியில் 221 பேரும் கோறளைப்பற்றுமத்தியில் 72 பேரும் ஓட்டமாவடியில் 43 பேரும் களுவாஞ்சிக்குடியில் 33 பேரும் மட்டக்களப்பில் 51 பேரும் ஏறாவூரில் 20 பேரும் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். போதனாவைத்தியசாலையில் 28 பேரும் படையினரில் 15 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

**திருமலையில் 383...**

திருமலை மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 383ஆக உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் திருமலை நகரில் 151பேரும் கிண்ணியாவில் 85பேரும் மூதூரில் 56பேரும்; உப்புவெளியில் 39பேரும் கூடுதலாக இனங்காணப்பட்டுள்ளனர்.அங்கு ஆறு பாடசாலை மாணவர்களுக்கும் தொற்றுறுதி செய்யப்பட்டிருந்தது.

**அம்பாறையில் 104...**

அம்பாறை பிராந்தியத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை முதற்தடடிவாயக 100க் கடந்து 104ஆக உயர்ந்துள்ளது. அங்கு கூடுதலாக அம்பாறை நகரில் 45பேரும் உகனயில் 30பேரும் தமனையில் 10 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

# இப்படிச் சொன்னாரா ஜனாதிபதி? ஶ்ரீதரன் முழக்கம்

கருத்தைச் சாட்சியாகக் கொண்டு ஏன் சர்வதேசத்தால் நடவடிக்கை எடுக்க முடியாது?

'கொலைகார ஜனாதிபதியின் கீழ் ஜனநாயகம் தழைக்குமா? ஹரினையே கொல்வேன் என்கிறவரின் கீழ் எவ்வாறு தமிழர்கள் வாழ முடியும். எனவே அவர்களுடன் சேர்ந்து தமிழர்கள் வாழ்வதா இல்லையா என்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்' த.தே. கூட்டமைப்பைச் சேர்ந்த எஸ்.சிறிதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு ஆக்ரோசமாக வேண்டுகோள் விடுத்தாட.; அங்கு தொடர்ந்துரைத்த அவர் :

ʹஅப்பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் முன்னெடுப்பதற்கு நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அதையும் மீறி திங்கட்கிழமை (18) இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இராணுவத்தினர் புடைசூழச் சென்று அகழ்வாராய்ச்சியை முன்னெடுப்பதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

ʹரஞ்சன் விவகாரத்தில் சட்டம் நிலைநாட்டப்பட்டுள்ளது என்றால் குருந்தூர் மலையில் நடந்தது என்ன? தமிழர் பிரதேசத்துக்கு ஒரு சட்டம்? சிங்களப் பிரதேசங்களுக்கு ஒரு சட்டமா? எனக் கேட்ட அவர் இவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழ முடியாது என்றார்.

ʹகுருந்தூர் மலையில் அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுக்க வேண்டுமென்றால் செங்கல் கற்களை அங்கு ஏன்? கொண்டுச் சென்று இறக்கவேண்டும். புத்தர் சிலையை அங்கு ஏன் நாட்ட வேண்டும் இராணுவத்தினரை ஏன் குவிக்க வேண்டும்? எனக்கேட்டார். அநுராதபுரத்தில் சிவன் கோவிலுக்குச்சொந்தமானதமிழர்காணிகள்உள்ளன எனத் தெரிவித்த அவர் ஆனால் அங்கு தமிழர்களைக் குடியேற்றும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அத்துடன் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான ʹதொண்டீஸ்வரம்ʹ அடியோடு அழிந்துவிட்டது.அதைஆய்வு செய்ய யார் வருவார்கள் எனவும், அவர் வினவினார்.

குருந்தூர் மலையில் இடம்பெற்றது வெளிப்படையான இன அழிப்பு ஆகுமெனவும் கூறினார்.

# ஜனாதிபதியின் ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் தமிழ் மக்கள் புறக்கணிப்பு!...

காரணமெனத்தெரிகிறது. எனவே இதுவிடயத்தில் முழுநாட்டிற்கும் தலைவரான ஜனாதிபதி தலையிட்டு இனவிகிதாசார அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர் மற்றும் கல்முனை மாநகரசபையின் த.தே.கூ. உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கல்முனை ஊடகமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அவர்கள் பகிரங்கமாக இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர். அங்கு உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் கூறுகையில்:

க.பொ.த. சா.தரம் உயர்தரம் படிக்காத பலர் அந்தந்த கிராமசேவையாளர்களின் பரிந்துரையின்கீழ் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றினார்கள். ஆனால் கல்முனை காரைதீவு உள்ளிட்ட தமிழ்ப்பிரதேசங்களில் இதற்கான நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளித்தோர் சும்மாயிருக்க வேறுயாருக்கோவெல்லாம் வழங்கப்படுகிறது. ஆளும் அரசியல்பிரமுகர்கள் சிலர் கையூட்டல்கள் பெற்றமைபற்றியும் அறியக்கிடைக்கிறது.

இங்குள்ள முக்கியதகவல். இந்த கல்முனை மாநகரில் ஆக இரண்டு தமிழர்க்கு மட்டுமே இத்தொழில் கிடைத்துள்ளது.

இதேநிலைவரம் எல்லா தமிழர்பிரதேசங்களிலும் இடம்பெற்றுள்ளது. காரைதீவில் இம்முறை கிடைத்த 10தொழிலும் முஸ்லிம்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. ஒரு தமிழருக்கும் வழங்கப்படவில்லை. அதிகாரிகளும் இதனை வெளியில் கூறுகிறார்களில்லை. இது ஏழைத் தமிழ்மக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகவே பார்க்கிறேன். இது ஜனாதிபதிக்குத் தெரியாமலிருக்கலாம். எனவேதான் இங்கு ஊடகங்களிலல் பகிரங்கமாகத் தெரிவிக்கிறேன். உடனடியாக இதற்கு நீதி வழங்கவேண்டும். என்றார். நகரஅபிவிருத்தித்திட்டம் என்ற போர்வையில் தமிழ்மக்களின் இருப்பைக் கபளீகரம் செய்யும் மாவடிப்பள்ளி கல்முனை கார்ப்பட் வீதியை உடனடியாக நிறுத்தவேண்டும்.

கடந்த 25வருடங்களாக கல்முனை நகரஅபிவிருத்தித்திட்டம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் ஜீவாதாரமான வயல்காணிகளை கபளீகரம் செய்து இருப்பை இல்லாதொழிக்கும் இவ்வீதியை அமைக்க ஹரீஸ் போன்ற இனவாதிகள் ஒற்றைக்காலில் நின்றனர்.

கல்முனையில் 40ஆயிரம் தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றபோதிலும் அவர்களிடம் எதுவுமே கலந்துரையாடாமல் பேசாமல் இச்சதித்திட்டத்தை அரங்கேற்ற முனைந்தனர்.

ஆனால்; தமிழுணர்வுள்ள எம்மவரின் எதிர்ப்புக் காரணமாக அவர்கள் அதை கைவிட நேர்ந்தது. தற்போது இனவாதி அதாவுல்லாஹ் கல்முனையில் கால்ஊன்றும் நோக்கில் வேறொரு போர்வையில் ஹரீஸ் எம்.பியுடன் சேர்ந்து அதேதிட்டத்தை ஜனாதிபதியைப்பிடித்துக் கொண்டு அமுல்படுத்தமுற்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் 1லட்சம் கிலோமீற்றர் கார்;ப்பட் வீதியமைக்கும் திட்டத்தின் கீழ் 5கிலோமீற்றர் நீளமான இவ்வீதியை போடுவதற்கு வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியுடன் தற்போது அளக்கும்வேலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. இந்தக்கணம்வரை இதுபற்றி இங்குவாழும் எந்தத்தமிழருக்கும் தெரியாது. பாருங்கள் எவ்வாறு எம்மீது மேலும் மேலும் சவாரி செய்யப்புறப்படுகிறார். அதாவுல்லாவை எச்சரிக்கின்றோம். முடிந்தால் இவ்வீதியை போட் டுப்பாருங்கள்.

வீதி அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால் கல்முனை தமி;ழ்ப்பிரதேசவீதிகளை வந்து பாருங்கள். காலாகாலமாக திட்டமிட்டு பாரபட்சம் காட்டி புறக்கணிக்கப்பட்ட பல வீதிகளுள்ளன. அவற்றைப்புனரமையுங்கள்.

மாவடிப்பள்ளிப்பிரதேசம் காரைதீவுப்பிரதேசசபைக்குள் வருகின்றது. ஆனால் இவ்வீதியமைப்பு தொடர்பாக அந்த காரைதீவு பிரதேச செயலாளருக்கோ பிரதேசசபைத் தவிசாளருக்கோ தெரியப்படுத்தாமல் தன்னிச்சையாக கள்ளக்களவாக முன்னெடுக்கிறார்கள்.

இதுவிடயத்தில் கல்முனை மேயரும் தலையிடவேண்டும். இந்த இடத்தில் பகிரங்கமாக அனைத்து தமிழ் அரசியல்வாதிகளையும் இனவாதமற்ற முஸ்லிம் சிங்கள அரசியல்வாதிகளையும் ஒன்றுசேர்ந்து இச்சதியை முறியடிக்க உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வண.சங்கரத்ன தேரர் கூறுகையில்:

கிழக்குமாகாணசபைத் தேர்தல் தாமதமின்றி நடாத்தப்படவேண்டும்.சில இனவாதிகள் இதனைக்குழப்ப முயற்சிக்கின்றனர். தேர்தலை நடாத்தி அந்தந்த பிரதிநிதிகளிடம் அபிவிருத்திவேலைகளைஒப்படையுங்கள். கிழக்கில் பின்தங்கிய தமிழர் பிரதேசங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவருகின்றன. தொழில்வாய்ப்பிலும் புறக்கணிப்பு.ஆளுநருக்கு இது தெரியாது.

ஜனாதிபதி அண்மையில் அம்பாறைக்கு வந்தார். ஆனால் எமக்கோ தமிழ்பிரதிநிதிகளுக்கோ எந்த அழைப்பும் விடுக்கவில்லை. இனமதசார்பற்று நாட்டின் தலைவர் நடக்க வேண்டும். கல்முனைக்கு வந்து பாருங்கள். இங்குள்ளதமிழ் முஸ்லிம் மக்களின் நிலைமை பற்றி அறியுங்கள்.

ஜனாதிபதியைச் சந்தித்து இங்குள்ள அத்தனை பிரச்சினைகளையும் விலாவாரியாக எடுத்துரைக்கவுள்ளேன். என்றார்.

# ஜனாஸா எரிப்பால் முஸ்லீம்கள்

வமனைகளிற்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத்பதியுதீன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முஸ்லீம் மக்கள் துயரில் சிக்குண்டுள்ளனர் கடந்த வாரம் கைக்குழந்தையொன்று தகனம் செய்யப்பட்டது.

முஸ்லீம் பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டதால் முஸ்லீம் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை NET kalmunainet.com e paper

2021ஜனவரி 24 ஞாயிறு
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதானவீதி பாண்டிருப்பு, கல்முனை
T.P.:0776965343, 0762933026, 0773457915
E.Mail: kalmunainet@gmail.com, ceditorsaga@gmail.com
சிந்தனைக்கு விருந்து
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

# அலட்சியம் வேண்டாம்

இன்னும் நாம் திருந்தியதாக இல்லை.நாளாந்தம் கோவிட் – 19 ஆல் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இதுவரை 278 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.விடுக்கப்படும் அறிவிப்புகளும் எச்சரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. ஏனோ தானோவென்ற போக்கும் அலட்சியமும் அழிவின் விளிம்புக்கு செல்கிறோம் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

கொரோனா முதல் அலையில் முழுமையாக சிக்காமல் தற்காத்துக் கொண்டு உலகுக்கு முன்மாதிரியாக இருந்த நமக்கு இரண்டாவது அலைத் தாக்கம் பாரிய சவாலாகவே இருக்கிறது. சுகாதார அறிவுரைகளை சரிவர பின்பற்றாததால் கொத்தணியாக சவால்களை எதிர்கொள்ளும் அபாயத்தினுள் சிக்கி இருக்கிறோம். கொரோனாவை கட்டுப்படுத்தும் தேசிய செயலணியின் தளர்ச்சியான போக்கும் இதற்கு ஒரு காரணமாக கொள்ளலாம்.

கொரோனா உயிரிழப்புக்களை 11 க்குள் மட்டுப்படுத்தி வைத்திருந்த அரசாங்கம் இரண்டாவது அலைத்தாக்கத்தின் போது நிலைதடுமாறியதையே உணர முடிந்தது.

சுமார் மூன்று மாத காலப் பகுதிக்குள் 278 உயிர்களை காவு கொடுத்தது மட்டுமல்ல 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.அதாவது இறங்கு முகத்தில் இருந்த பாதிப்பு வீதம் ஏறுமுகத்துக்கு சென்று விட்டது.என்றாலும் பாதிப்புகளை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கமும் இராணுவத் தளபதி தலைமையிலான செயலணியும் எடுத்து வரும் கடுமையான முயற்சிகளை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. பொருளாதார சிக்கல்களுக்குள் நாடு சிக்கி இருக்கும் நிலையிலும் கொரோனாவை கட்டுப்படுத்தும் செயல்திட்டத்திற்கென அரசு கோடிக் கணக்கில் செலவிடுகிறதென் பது உண்மைதான்.

தனிமைப்படுத்தலில் சிக்கியிருக்கும் பிரதேசங்களுக்குள் இருக்கும் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன. இதனையும் அரசாங்கத்தின் ஓர் ஆரோக்கியமான முன்னெடுப்பாகவே கருத முடியும். ஆனால்,முறையான அமுல்படுத்தல் இல்லாத எந்த ஒரு திட்டமும் வெற்றி அளிப்பதில்லை.சட்டமும் வர்த்தமானி அறிவிப்புகளும் அவசியமானவைதான். என்றாலும்,அவைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதில் தான் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கிறது.

மக்கள் மத்தியில் இப்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சனை நம்பிக்கையின்மையாகும். அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் நூறுவீதம் நடைமுறைப்படுத்த முடியாமல் போவதற்கு இதுதான் அடிப்படையாக இருக்கிறது.

சோதனைகள் என்றாலே ஓட்டம் பிடிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து இருக்கிறது.இந்த சோதனைகள் தொடர்பில் பரப்பப்படும் வதந்திகளால் மக்கள் அச்சமடைந்து இருக்கிறார்கள். சோதனை அறிக்கைகளில் தவறுகள் இடம்பெறுவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. இதனால், திட்ட அமுலாக்கப் பணிகளில் பின்னடைவு நிலையே தொடர்கின்றது.

கல்முனை,அக்கரைப்பற்று உட்பட பல பொது இடங்களில் antigent test செய்வதற்கு அதிகாரிகள் சென்றபோது பலரும் தலைதெறிக்க தப்பியோடினர். அதைப் போல,சம்மாந்துறையில் ஏற்பட்ட பதற்ற நிலை மக்கள் மத்தியில் உள்ள பீதியை தெளிவாகக் காட்டுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு பிசிஆர் சோதனை செய்யப் போவதாக வதந்திகள் பரவியதையடுத்து பெற்றோர்கள் பாடசாலைகளை முற்றுகையிட்டனர்.

பாடசாலைகளுக்குள் புகுந்த பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பலாத்காரமாக அழைத்துச் சென்றனர்.இதனால் ஏற்பட்ட பதட்டம் நிலையினால் சம்மாந்துறை வலயத்தில் 28 பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டன.

இதன் மூலம் 16 ஆயிரம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இதேபோல,கொழும்பில் உள்ள தொடர்மாடி வீட்டு தொகுதிகளில் உள்ளோரை பிசிஆர் சோதனைக்கு அழைத்த போதும் பலர் ஓடி தப்பினர். அல்லது ஆர்வம் காட்டவில்லை. இந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களிடம் கேட்டால் மருத்துவ சோதனை அறிக்கையில் நம்பிக்கை இல்லை என்கின்றனர்.

இதன் பின்னணியில் இருப்பது வதந்தி மட்டுமல்ல, பிசிஆர் தொடர்பில் மக்கள் கொண்டுள்ள அச்சத்தையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.தவறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் வேரூன்றுவது ஏற்புடையதல்ல. இருந்தாலும், அரசாங்கமே இந்தப் பிரச்சினைக்கு (நம்பிக்கையீனத்தை போக்க) பரிகாரம் காண வேண்டும்.

கொரோனா என்ற கொடிய வைரஸ் உலகில் மனித இனத்துக்கே சவால் விடும் நிலையில் இனரீதியான அரசியல் செயல்பாடுகளும் பிரதேச வேறுபாடுகளும் மிக மோசமாக தலைவிரித்தாடுகின்றன. கொரோனாவை கட்டுப்படுத்துவதில் இவைகளும் தடைக்கற்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கல்முனையில் நடக்கின்ற சில சம்பவங்கள் நல்ல உதாரணம் மட்டுமல்ல கவலை தருவதாகவும் இருக்கின்றன.

ஆகவே,வறட்டுத்தனமான சிந்தனைகளையும் அலட்சியப் போக்கையும் தூக்கி எறிந்துவிட்டு பொது எதிரியை ஒழிக்க உறுதியுடன் செயல்படுங்கள்.

## அரசியல் பத்தித் தொடர்- 01

# சொல்லவும் வேணும்! சொல்லவும் போடா! !

தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் இவ்வருடம் முற்பாதிக்குள் நடைபெறலாம் என எதிர்வுகூறப்படுகின்ற நிலையில் இப்பத்தியின் கரிசனை அதன்மீது குவிகிறது.

இத்தேர்தல் பெரும்பாலும் பழைய முறையிலேயே அதாவது விகிதாசாரத்தேர்தலாக மட்டுமே நடைபெறும் சாத்தியமே அதிகமுள்ளது.

கிழக்குமாகாணசபை இரண்டு போனஸ் ஆசனங்கள் உட்பட மொத்தம்37 ஆசனங்களைக் கொண்டது. முழுக் கிழக்கு மாகாணத்திலும் எந்தக் கட்சி அதிகூடுதலான வாக்குகளைப் பெறுகிறதோ அந்தக் கட்சிக்கே இந்த இரண்டு போனஸ் ஆசனங்களும் ஒதுக்கப்படும்.

ஆட்சியமைப்பதற்குத் தேவைப்படும் அதிகுறைந்த பெரும்பான்மையான 19 ஆசனங்களைப் பெறுவது கிழக்கின் களநிலையைப் பொறுத்தவரை எந்தத் தனிக்கட்சிக்குமே சாத்தியமில்லை. இந்த நிலையில் எந்தக்கட்சி அதிகூடுதலான சாதாரண பெரும்பான்மையைப் பெறுகின்றதோ அந்தக்கட்சியிடமே ஆட்சியமைக்கும் தகுதியும் ஏனைய கட்சியொன்றுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைப்பதற்கான பேரம் பேசும் வலுவும் முதலில் செல்லும்.

தமிழர்தரப்புக் கட்சியொன்று இத்தகுதியை எட்டுவதற்குத் தேவையான சாதாரண பெரும்பான்மை ஆசனங்களைப் பெறவேண்டுமானால் கிழக்கில் செயற்படுகின்ற அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு கூட்டு அரசியல் பொறிமுறையின் கீழ் ஒன்றிணைந்து அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரு பொதுச் சின்னத்தின்கீழ் அல்லது கூட்டிணையும் கட்சியொன்றின் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டால் மட்டுமே இது சாத்தியம். அப்படியென்றால்தான், போனஸ் ஆசனங்கள் இரண்டும் உட்பட அதிஉச்சமாக 14 அல்லது 15 ஆசனங்களையாவது தமிழர்தரப்பு வென்றெடுத்து ஆட்சியமைப்பதற்கான தகுதியைப் பெற்று பேரம் பேசும் வலுவைத் தம்வசப்படுத்தலாம்.

ஆனால், கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நடந்தது போன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்புக்குப் (தமிழரசுக்கட்சிக்குப்) பின்னால் கொஞ்சப்பேரும், பிள்ளையானுக்குப் பின்னால் கொஞ்சப்பேரும், வியாழேந்திரனுக்குப் பின்னால் கொஞ்சப்பேரும், கருணா அம்மானுக்குப் பின்னால் இன்னும் கொஞ்சப்பேரும், தேர்தல் காலங்களில் மட்டும் வந்து கிழக்குமாகாணத்தில் திருவிழாக்கடை வைக்கும் தமிழ்த் தேசியக்கட்சிகள் எனத் தமக்குத்தாமே குறிசுட்டுக்கொண்ட வடக்கைத் தளமாகக் கொண்ட தமிழ்கட்சிகளின் பின்னால் மிகுதிப்பேரும் சென்று கட்சி அரசியல் நடாத்துவதால் கிழக்குத் தமிழர்கள் ஒன்றுதிரண்ட அரசியல் சக்தியாக மேற்கிளம்பவோ - கிழக்குமாகாண ஆட்சியதிகாரத்தைத் தம்வசப்படுத்தவோ - கிழக்குத் தமிழர்களின் இருப்பையோ அடையாளத்தையோ அவர்களது சமூகபொருளாதார அரசியல் நலன்களையோ காப்பாற்றிப் பேணவோ முடியாதுபோகும். கிழக்குத்தமிழர்களின் எதிர்காலம் பழையகுருடி கதவைத்திறடி போல்தான் போய்முடியும்.

கிழக்கில், தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெற்ற அதாவது தேர்தல்கள் ஆணையத்தினால் அங்கிகீகரிக்கப்பெற்ற இரண்டே இரண்டு தமிழ் அரசியல் கட்சிகள்தான் உள்ளன. ஒன்று, சிவநேசதுரை சந்திரகாந்தனைத் (பிள்ளையான்) தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி. சின்னம் படகு. மற்றது, கலாநிதி கா.விக்னேஸ்வரனைத் தலைவராகக் கொண்ட அகில இலங்கை தமிழர் மகாசபை. சின்னம் கப்பல்

முதலில் கிழக்கைத் தளமாகக் கொண்ட இந்த இரண்டு கட்சிகளும் ஒரு கூட்டு அரசியல் பொறிமுறையொன்றின் கீழ் முறையாக ஒன்றிணைய வேண்டும். 05.08.2020 அன்று நடந்து முடிந்துள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளை வைத்து மதிப்பீடு செய்தால் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 60இ000 வாக்குகளும், அகில இலங்கை தமிழர் மகாசபைக்கு அம்பாறை மாவட்டத்தில் சுமார் 30இ000 வாக்குகளும் வாக்குவங்கிகளாக உள்ளன. முதலில் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து கொள்ளுமானால் அந்த இணைவுக்குள் கிழக்கைத் தளமாகக் கொண்டதும் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெறாது செயற்பட்டுக் கொண்டிருப்பதுமான ஏனைய தமிழ்க்கட்சிகளையும் உள்வாங்கி ஒரு வலுவான அரசியல் கூட்டமைப்பை உருவாக்கிக் கிழக்கின் தனித்துவ அரசியல் அடையாளத்தையும் அரசியல் ஐக்கியத்தையும் மேம்படுத்தலாம். எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பதைக் கூட்டிணையும் கட்சிகள் கூடி இறுதிக்கட்டத்தில் புரிந்துணர்வின் அடிப்படையில் தீர்மானிக்கலாம்.

இவ்வாறு தமிழ்க்கட்சிகளின் ஒரே சின்னத்தின் கீழான ஒன்றிணைவு ஏற்படுமாயின் மக்களும் நம்பிக்கையோடு ஒற்றுமைப்பட்டு உற்சாகமாக வாக்களிப்பில் கலந்து கொள்வார்கள். அவர்களுடைய அரசியல் உளவியலிலும் மாற்றங்கள் ஏற்படும். தமிழர்களின் வாக்களிப்பு வீதமும் அதிகரிக்கும்.

தமிழ்க்கட்சிகள் தனித்தனியே பிரிந்து நின்றால் மக்கள் விரக்தியும், சலிப்பும் வெறுப்புமுற்று வராக்களிப்பு வீதம் குறைவது மட்டுமல்ல அளிக்கப்படும் வாக்குகளும் வீணாகச் சிதறுண்டு தமிழர்களுக்கு மேலும் பின்னடைவு ஏற்படும்.

இந்த அரசியல் ஆபத்தை உணர்ந்து சம்மந்தப்பட்ட தமிழ் அரசியல் கட்சித் தலைமைகள் இனியும் காலம் தாமதியாது மக்கள் முன் பகிரங்கமாக அறிவித்து மிகவிரைவில் ஒரே மேடையில் ஒன்றிணைய வேண்டும் என்பதையே இப்பத்தி வலியுறுத்த விரும்புகிறது. இந்த ஒன்றிணைவு எல்லாத் தேர்தல்களுக்கும் பொருத்தமானதே.

கல்முனைநெற் மின்னிதழ் ஆசிரியபீடம்
பிரதம ஆசிரியா: வி.ரி.சகாதேவராஜா,
இணைஆசிரியர்: பு.கேதீஸ், ஆலோசகர்: க.குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்பொஸ் 4 வின்னர் ஆரிக்கு அதிஷ்டம்



வேதசகா

தமிழில் தொடங்கப்பட்ட பிக்பாஸ் நிகழ்ச்சியில் இதுவரை நான்கு சீசன்கள் நடந்து முடிந்துள்ளன. முதல் சீசனில் ஆரவ் டைட்டிலை ஜெயித்தார். இரண்டாவது சீசனில் ரித்விகாவும்இ மூன்றாவது சீசனில் முகின் ராவ்வும் வெற்றி பெற்றனர்.

இந்த நிலையில்இ விறுவிறுப்பாக நடந்த 4ஆவது சீசன் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. இந்த சீசனில் ஆரி வெற்றி பெற்றார். குறிப்பாக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

முதல் இடத்தை பிடித்த ஆரிக்குஇ 16 கோடியே 50 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்திருந்ததாகவும்இ இரண்டாம் இடம் பிடித்த பாலாவுக்கு 6 கோடியே 14 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்ததாகவும் கமல் தெரிவித்தார்.

இதன்மூலம் சுமார் 10 கோடி வாக்குகள் வித்தியாசத்தில் ஆரி வெற்றி பெற்றுள்ளார். பிக்பாஸ் வரலாற்றில் இதுவரை இவ்வளவு வாக்குகள் வித்தியாசத்தில் யாரும் வெற்றி பெற்றதில்லை என கூறப்படுகிறது.




பி.எஸ்.புவிராஜா, என். திவாகராஜ்
pasampuvi56@gmail.com, hinthiva@live.com

# நடிகை வரலட்சுமிக்கு டும் டும் டும் !



நடிகை வரலட்சுமி சரத்குமார் விரைவில் திருமணம் நடக்க உள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

சுப்ரீம் ஸ்டார் சரத்குமாரின் மகள் என்ற அடையாளத்தையும் கடந்து தனக்கென தமிழ் சினிமாவில் தனி அடையாளம் பதித்துள்ளார் நடிகை வரலட்சுமி. முதல் திரைப்படமாக விக்னேஷ் சிவன் இயக்கிய போடா போடி படத்தில் சிம்பு ஜோடியாக அறிமுகமானவர்.

இயக்குனர் பாலா இயக்கிய தாரை தப்பட்டை படத்தில் கரகாட்ட கலைஞராக நடித்தார். இப்படம் இவருக்கு பல பாராட்டுக்களை பெற்று தந்தது.

அதன் பின்னர் விஷாலுடன் சண்டைக்கோழிஇ விஜய்யுடன் சர்கார் ஆகிய படங்களில் வில்லியாக நடித்து அனைவரையும் எதிர்பார்ப்பையும் வேற லெவலுக்கு பூர்த்தி செய்தார். இது அவருக்கு பெயரையும் பெற்றுத்தந்தது. ஏற்கனவே சரத்குமார் - ராதிகாவின் மகள் ரயன் கிரிக்கெட் வீரர் அபினவ் மிதுனை திருமணம் செய்து கொண்டுள்ள நிலையில்இ வரலட்சுமி சரத்குமாரும் கிரிக்கெட் வீரரை கரம் பிடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.



# கொரோனா எவ்வாறு உலக தொற்றாக மாறியது?



இன்று உலகை ஆட்டுவிக்கும் தொற்று நோய்களில் முன்னணியில் கொரோனா வைரஸினால் ஏற்படும் தொற்று பாரதூரமான உயிரிழப்பையும் , பொருளாதார இழப்பையும் உண்டு பண்ணி கொண்டிருக்கிறது.

இது எவ்வாறு உலக தொற்றாக மாறியது என்று சற்று சிந்தித்தோமானால், உண்மையிலேயே நாம் சவர்காரமிட்டு கைகளை கழுவுதல், முகக்கவசம் அணிதல், தொற்றுநீக்கி திரவங்கள் பயன்படுத்துதல் போன்ற விடயங்கள் சுகாதார நடைமுறைகளாக பேணப்படவேண்டியவையே. ஆனால் நாம் இதை பின்பற்றாது தவிர்த்தே வந்துள்ளோம். சுகாதார நடைமுறைகளாக இவைகள் முன்னதாக இருந்தும், நடைமுறைப்படுத்தலில் இவற்றை நாம் கைகழுவி விட்டிருந்தோம்.

அதன் விளைவாகவே இன்றைய உலகம் கொரோனா வைரஸ் தோற்றால் சவால்களை எதிர்கொண்டுள்ளது, என்பதுடன் பல தொற்றுக்களும் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

முதலில் நாம், நாம் வாழும் சூழலை சுகாதார நடைமுறைக்குள் கொண்டு வருவது அவசியம். இச் சுழல் என்பது வீடு , மலசல கூடங்கள், கிணறு , வளவு என்பவற்றுடன், சுற்றுசூழலும் அடங்குகின்றது. இவை அனைத்தையும் சுகாதார நடைமுறைகளுடன் பராமரிப்பது அவசியம். அத்துடன் இது எமது சமூக கடமைகளில் ஒன்றும் ஆகின்றது.




கா. சந்திரலிங்கம், ப. சந்திரமோகன்
chandralingham13@gmail.com
sanramohan1@gmail.com

## வீடு

நாம் எமது வீட்டை தொற்று நீக்கி திரவம் (குளோரின், லைசோல், கடல் நீர் கொண்டு தொற்று நீக்குகின்றோமா? தினமும் அல்லது வாராந்தம் இவ்வாறு செய்வதனால் வீட்டினுள் தொற்று கிருமிகள் பெருக்கத்தை கட்டுப்படுத்த வழிசெய்கிறது.

வீட்டினுள் சமையலறை, படுக்கையறை, களஞ்சியம் என்பன அதன் தன்மைக்கு ஏற்ற வகையில் தூய்மைப்படுத்துதலும், தொற்று நீக்குதலும் சுகாதார முறைகளாகும். இதில் படுக்கையறை நித்திரைக்கு பயன்படுத்திய துணிகளை அடிக்கடி கழுவுதல், தினமும் நன்கு சூரிய ஒளியில் காயவிடுதல் என்பதும், சமையலறை பாத்திரங்களை கழுவுவதுடன் அறையையும் தொற்று நீக்கி திரவத்தினால் மொப்பிங் செய்யலாம்.

(எமது மூதாதையர் மஞ்சள் நீர் , கடல்நீர், மாட்டின் சாணம் என்பவற்றை பயன்படுத்தி தொற்றுக்களை நீக்கி வந்துள்ளதையும் நாம் நினைவுகூர வேண்டியுள்ளது).

## மலசல கூடங்கள்

இதுவும் தொற்று பெருகக்கூடிய இடமாகவே கருதப்படுகிறது. இதனையும் நாம் கட்டாயம் தினசரி தொற்று நீக்கி திரவம் கொண்டு துப்புரவு செய்வது அவசியமாகும்.

அதாவது இதனை பாவிக்க முன்பும் பின்பும் தண்ணீர் கொண்டு நன்கு கழுவுதல் அவசியம், தொற்று நீக்கிகளையும் பயன்படுத்தலாம். அத்துடன் சூரிய ஒளி, காற்றோட்டம் உள்ளவாறு அமையச்செய்யலாம்.

மலம் கழிக்க முன்னரும் பின்னரும் கைகளை சவர்க்காரம் கொண்டு தூய்மைப்படுத்துவது அவசியம்.

## சமையலறை

சமையலறையில் பாவிக்கும் துணி நீண்ட நாட்களாக பாவிக்கப்படுவதனால் இதில் அதிக நுண்ணுயிர்கள் உயிர்வாழ்வதாகவும் கருத்துகள் கூறப்பட்டுள்ளது. எனவே சமையலறை பாவனை துணிகளை தினசரி கழுவியோ அல்லது மாற்றியோ பாவிக்கலாம்.

## காணி

எமது எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பு அதாவது வளவு பல பறவைகள் விலங்குகள் ஊர்வன என்பவற்றினால் மாசுபடுத்தப்படலாம். ஆதலால் இவற்றினால் ஏற்படக்கூடிய தொற்றுக்களையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இங்கும் கழிவுகள் அகற்றப்பட்டு சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப அடிக்கடி தொற்று நீக்கி திரவம் பயன்படுத்தலாம்.

இதிலும் எமது முதாதையரின் செயற்பாடுகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

அவர்கள் இயற்கையாக மஞ்சள்நீர்கடல்நீர் கொண்டு வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் வளவை தொற்றுநீக்கியுள்ளனர். நாம் விஞ்ஞான உலகம் என்ற பெருமிதத்தில் இவற்றையெல்லாம் கருத்திற் கொள்ளவில்லை.

## சூழல்

எமது எல்லைக்கு வெளியில் உள்ள பிரதேசம் எவ்வாறு உள்ளது என்ற அக்கறையும் எமக்கு இருக்க வேண்டும். நீர்நிலைகள் , குப்பை மேடுகள், மாசுபடுத்தப்பட்ட தரைகள் என்பன எம்மால் சுட்டிக்காட்டப்பட்டு பிரதேச சபை, சம்பந்தப்பட்ட சேவையாளர்கள் மூலம் தொற்றுக்கள் ஏற்படாவண்ணம் சுகாதார நடைமுறைகளைப் பேணலாம்.

இவ்வாறு நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சுகாதார நடைமுறைகளும் எம்மையும், எமது சூழல் சார்ந்த சமூகத்தையும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பதன் வாயிலாக உடல் ஆரோக்கியத்தை சிறப்புற பேணலாம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கு தயாராகுதல்




கா.சாந்தகுமார், எஸ்.புனிதன்
K.shanthakumar1966@gmail.com

கல்வி ரீதியாக மாணவர்கள் முகங்கொடுக்கின்ற பெரும் சவாலாக பரீட்சையில் சித்தியடைவதை குறிப்பிட முடியும். பரீட்சை நெருங்கும் போது பெரும்பாலான மாணவர்கள் பல்வேறு உடல் உள ரீதியான பிரச்சனைக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றில் சில முக்கியமான காரணங்களைக் குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றன.

தூக்கமின்மை,பசியை உணராமை,தலைவலி,கோபம், அச்சஉணர்வு கவலை, மறதி,நகம் கடித்தல் ,அவதானம் குறைந்து போதல், குழப்பநிலை குற்றவுணர்வு போன்றவற்றை குறிப்பிடலாம்.உளவியலில் பரீட்சைப்பதகளிப்பு (கூஞுண்ணு அணதுடிஞுணுதூ) என அழைக்கின்றனர்.

பரீட்சைப்பயம் பதகளிப்பு ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள் இருக்கின்றன அவற்றில் இன்றியமையாத காரணமாக பரீட்சையில் தோல்வி அடையலாம் என்ற பயம் பெற்றோர் ஆசிரியர்கள் நண்பர்களின் மிகையான எதிர்பார்ப்பினால் ஏற்படும் அழுத்தம் கடந்தகால பரீட்சைகளில் சிறந்த முறையில் முகம்கொடுக்க முடியாமல் இருந்தமை முன் ஆயத்தமின்மை பாடப்பரப்புகளை சரியாகப் பூரணப்படுத்தாமல் இருப்பது போன்ற காரணங்கள் முக்கியம் பெறுகின்றன.

மேற்கூறிய காரணங்களின்படி பரீட்சைக்கு தயாராகுவது என்பது ஒரு திறனாகும் பரீட்சை நாள் வரும்வரை எதிர்பார்த்துக்கொண்டிராமல் நேர காலத்துடன் தயாராக வேண்டும்.

அவசர அவசரமாக செய்யும் வேலைகளால் நல்ல விளைவுகளை எதிர்பார்க்க முடியாது சில பிள்ளைகள் பரீட்சைக்கு முந்திய இரவில் கண் விழித்துப் படிக்கின்றனர் அந்த நிலைமை ஆரோக்கியமான நிலைமை இல்லை ஆனால் மிகவும் பொருத்தமாக அமைவது பரீட்சைக்கு முந்திய நாள் சிறந்த முறையில் நித்திரை செய்வது,நேர காலத்துடன் தயாராகி பரீட்சைக்கு செல்வது மனதில் மறையான எண்ணங்களை உருவாக்காது.

பரீட்சை பதகளிப்பை போக்கக்கூடிய நுட்பங்களில் சிறப்பாக அமைவது கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு சுயமாக விடை எழுதி ஆசிரியரிடம் காட்டி மதீப்பீட்டை பெற்றுக்கொள்வதாகும். நல்ல நல்ல முன்மாதிரிகளை பெற்றுக்கொண்டு கற்பது எதனையும் விஞ்ஞான ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் புரிந்து கொள்ளுதல்,வகுப்பில் வழங்கப்படும் பயிற்சிகளுக்கு முகம் கொடுத்து விடை எழுதுவது நண்பர்களுடன் குழுக்கலந்துரையாடல்களில் பங்குகொள்வது போன்ற நிலைமைகளில் தனது பலம் பலவீனங்களை அறிந்து கற்றுக்கொள்ளலாம் .அவ்வாறு தனது திறமைகள் ஆற்றல்கள் பற்றிய ஓர் சுய மதிப்பீட்டை செய்து கொள்ளலாம்.

பரீட்சைக்கு சிறந்த முறையில் முகம் கொடுப்பதற்கான கீழ் வரும் விடயங்களில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் கவனம் செலுத்துவதன் மூலம் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற முடியும்.

பரீட்சைக்கு முந்தியநாள் நன்றாக நித்திரை கொள்ளுதல் பரீட்சைக்கு சமூகமளிக்க முன் போசாக்குள்ள இலகுவில் சமிபாடு அடையும் உணவுகளை உண்பது.

பரீட்சை தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாகவே பரீட்சை நிலையத்திற்கு செல்லுதல்

தனது கதிரையில் அமர்ந்து மெதுவாக கண்களை மூடி மிக ஆழமாக மூச்சு இழுத்து ஐந்து தடவைகள் வெளிவிடுதல் மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயத்தை நினைத்து மனதை இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருத்தல்

பரீட்சை எனக்கு ஓர் இலகுவான இலக்காகும் இன்று நடைபெறும் பரீட்சையை நான் நன்றாக எதிர்கொண்டு விடை எழுதுவேன் அது என்னால் முடியும் என நேரான எண்ணங்களை நினைத்து பரீட்சை எழுத வேண்டும்.

ஒரு வினாப்பத்திரத்திற்கு விடை எழுதி விட்டு பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறி வந்த பின் எழுதிய விடை பற்றி சரியா? பிழையா? ஏன ஆசிரியர்கள் பெற்றோர்கள் அதிபர்கள் சக மாணவர்களுடன் கலந்துரையாடினால் பழையாக விடை எழுதிவிட்டேன் என்ற எண்ணம் தோன்றினால் அடுத்த வினாப்பத்திரத்திற்கு சரியாக விடை எழுத முடியாமல் போகலாம் அதனால் எழுதிய விடைகள் பற்றி யோசித்து நேரத்தை வீணடிக்காமல் அடுத்த வினாப்பத்திரத்திற்கு தயாராக வேண்டும். பரீட்சைகள் அனைத்தும் முடிந்த பின் முழுவதுமாக கலந்துரையாடி முடிவினை பெறலாம் .

பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தியடைவதற்கான கற்றல் சூழல் அமைதியான வசதியான இடம் ஆரோக்கியமான கண்காணிப்பு அடிப்படையிலான கற்றல் திறன்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஏற்படுத்தி கொடுக்கும் போது மாணவர்கள் பரீட்சையை இலகுவான இல இலக்காக இல இலக்காக எதிர் கொண்டு வெற்றியடைவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் போது கற்பதில் ஆர்வம் காட்டி பரீட்சைகளை இலகுவாக எதிர்கொள்வார்கள்.

# 2200 ஆண்டுகால பழமை வாய்ந்த நிந்தவூர் ஆலயத்திற்கு அடிக்கல்

சுமார் கி.மு-2 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஒரு அற்புதமான ஆலயம்..கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிந்தவூர் என அழைக்கப்படும் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த ஒரு கிராமத்தில், சோழர்கள் காலத்தில் பராமரிக்கப்பட்டு கூத்திய மன்னனினால் பராமரிக்கப்பட்ட ஒரு மாபெரும் கருங்கல்லால் அமைக்கப்பட்ட பேராலயம்.

சுமார் 2200 ஆண்டுகள் பழமைவாய்ந்த தமிழர்கள் வாழ்ந்த ஒரு முன்னைய தமிழ்கிராமத்தில் (தற்போது நிந்தவூர்) இருந்த இக்கோவிலை சில ஆக்கிரமிப்புகளால் சிதைக்கப்பட்டு முற்றிலும் அழிவுற்ற இவ் ஆலயத்தை , இன்று பல சிவ ஆலயங்களை தன் திருக்கரங்களால் புணரமைத்த

சித்தர்களின்குரல் சிவஷங்கர்ஜீ அவர்களின் குடும்ப உபயமாக




பரதன் கந்தசாமி
kpkanthaswamy@gmail.com

இலங்கைக்குரிய சித்தர்களின் குரல் தலைவர் ஆதித்தன் ,துணைதலைவர் மனோ அவர்களின் தலைமையில் உருவாக்கி அமைப்பதற்கு இறை அருளால், குருவருளால் அடிக்கல் நாட்டப்பட்டது

2200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நிந்தவூர் சித்திவிநாயகர் ஆலயத்திற்கான புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நடப்பட்டது.சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜீயின் ஏற்பாட்டில் இப்புதிய ஆலயம் நிருமாணிக்கப்படவுள்ளது.

நிந்தவூர் 2ஆம் பிரிவில் 2200ஆம் ஆண்டுகளுக்கு முன்பு சிவன் ஆலயமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் பிற்காலத்தில் சித்திவிநாயகர் ஆலயமாக மாறி அருள்பாலித்துவந்தது.பழையாதாகையால் அண்மையில் அதனை இடித்து பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

ஆலயத்தலைவர் அ.அற்புதராசா தலைமையில் நடைபெற்ற அடிக்கல்நடுவிழாவில் சிவசங்கர் ஜீ ,காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் ,வேல்சாமி , கஜேந்திரா ,கல்முனை இளைஞர்சேனா அமைப்பினர் உள்ளிட்ட பலர் அடிக்கல் நாட்டினர்.நிந்தவூர் 2 ம் பிரிவில் தற்சமயம்81தமிழ்க்குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன. 40மாணவர்கள் அறநெறிப்பாடசாலையில் பயில்கின்றனர் என இந்து கலாசார அலுவலர் கு.ஜெயராஜி கூறினார்.

எதிர்வரும் 3மாதங்களுள் இவ்வாலயம் நிருமாணிக்கப்பட்டு கும்பாபிசேகம் நடாத்தப்படும் என சிவசங்கர் தெரிவித்தார்.

சகா










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புகழ் பெற்ற ரஷ்ய நாவலாசிரியரான
# நிக்கோலாய் ஒஸ்த்திரொவ்ஸ்கி



ஓர் இலக்கிய வாதியாக புகழ்பெறுவதுவும் ஒரு போர்வீரனாக வாழ்ந்து மடிவதும் பற்றிய தனது கவிதை ஒன்றில் இலங்கை மட்டக்களப்பை சேர்ந்த கவிஞர் சுபத்திரன் ( தங்கவடிவேல்)அவர்களது கவிதை ஒன்று நினைவில் வந்தது.

ஒரு கோடிக்கவிதைகளால் உலகம் போற்றும்
பெருங் கவிஞன் இவனென வாழ்ந்தால் அஃது
ஒரு சொட்டு ரத்தத்தை உரிமைப் போரில்
தருபவனின் புகழ் முன்னே தூசு தூசு

இந்த கவிதைவரிகள் ரஷ்ய நாவலாசிரியரான நிக்கோலாய் ஒஸ்த்திரொவ்ஸ்கி அவர்களுக்கு மிகப் பொருந்தக் கூடியதே.

முதலாம் உலகப்போரின் பின்னர் வல்லரசுகளுக்கிடையேயான பனிப்போர் தீவிரம் பெற்றிருந்த காலப்பகுதியானது பல ஆத்மார்த்தமான எழுத்தாளர்களை உருவாக்கியிருந்தது. இந்த வரிசையில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியவர் ரஷ்யாவில் 1904 ம் ஆண்டு பிறந்த நிக்கோலாய் ஒஸ்த்திரொவ்ஸ்கி என்பவர் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியவர்.

எழுத்தாளன் என்பவனுக்கு பேனாமுனை மட்டுமே கைதேர்ந்தது என்ற நிலைப்பாடு சோவியத் ரஷ்யாவின் போர்க்காலசூழலுக்கு வேறுபட்டதாகவே அமைந்தது. நிக்கோலாய் ஒஸ்த்திரோவ்ஸ்க்கி எழுத்தாளராக மட்டுமன்றி ஒரு போர்வீரனாகவும் வாழந்து போர்முனையில் காயமுற்று தன்வாழ்வின் இறுதிக்கட்டமான 12 வருடங்களை ஒரு பார்வையற்றவராகவே வாழ்ந்து கழித்தவர் என்பது வேதனைக்குரிய விடயமே.முதலாம் உலகப்போரின் பின்னர் 1917ல் ஏற்பட்ட விளாடிமிர் லெனின் தலைமையிலான ஒக்ரொபர் புரட்சி அதனைத் தொடர்ந்து புரட்சிப் படையினரான செஞ்சேனைக்கு எதிராக ஏற்பட்ட உள்நாட்டுப் போர் என்பவை இவர் முகங்கொடுத்துத மட்டுமன்றி 1920 வரை நீடித்த இந்தப்போரில் 23 வயதே ஆன நிக்கோலாய் எழும்பி நடக்கமுடியாத அளவிற்கு காயங்களுக்கு ஆளானார்.

தொடரும்........

# கலம்பகம்



சபா சபேஷ ன்
sabasabeshan@yahoo.com

(சென்ற வாரத்தொடர்ச்சி)

எண்பதுகளின் ஒரு நாளிலேயே அந்நிகழ்வு நடந்தேறியது. மலர்.. பதிநான்கு வயதுப் பிள்ளை. பருவமடையாதவள். பின்தங்கிய கிராமமொன்றில் பிறந்தவள். தந்தைக்கு உதவியாக ஆடு மேய்ப்பவள். அவளின் கிராமதிற்கு சுற்றுலா வந்த நான்கு இளைஞர்களால் அவள் சி

# மலராத பூக்கள்

திருமதி. யௌவனா வசந்தன்
பாண்டிருப்பு

இவ்வாரச் சிறுகதை

தைக்கப்பட்டாள். மிருகங்களோடு விளையாடித்திரிந்த அவள் வெறுமனே நான்கு மனிதர்களால் அன்று பாதிக்கப்பட்டாள். மலரின் உயிரை மட்டுமே அவளது பெற்றரோ காப்பாற்றியெடுத்தனர். அந்த நால்வரைப் பற்றி போராடுமளவு அவர்களின் குடும்ப நிலை கொடிகட்டிப் பறக்கவில்லை. வழக்கமாகிப்போன நால்வராய் அந்த நால்வரும் மறக்கடிக்கப்பட்டனர்.

ஆனால் அந்த நால்வரில் ஒருவராக இருந்த நான், நாற்பது வருடங்களின் பின் இன்றுதான் மேலிட்ட குற்றவுணர்வு தாங்க முடியாமல் இறந்துகொண்டிருக்கிறேன். நீச்சயம் என் இறப்பின் ஓசையை என் எழுத்துக்கள் உனக்கு உணர்திக் கொண்டிருக்கும் என நம்புகிறேன்.

தொடரும்........

# கனவு கண்டேன்.

கனவு கண்டேன்.
அந்த வானம் மெல்ல
சிணுங்கத் தொடங்கியது
அதன் நீலத் துகிலும்
கறைபட்டு கலங்கிப்போனது
கண் நொடிப் பொழுதில்

கூடுவிட்டு விலக விருப்பமின்றி
வெறுப்போடு அந்த பறவைகள்
விடியலை உணர்ந்தும் ஊமையாய்
அடங்கிக்கொண்டது

சூரியனும் அந்த கறைக்குள்
காணாமல் போனதால்
காற்று தேடிக்கொள்கிறது
ஏமாந்தும் போனது

தருக்கள் அசைவற்ற ஜடமானது
தெருக்களும் சனங்களைத்
தொலைத்தே சங்கடமானது.

ஊழிக்கால கோலமொன்றை
.இயற்கை ஜாலமாய்க் காட்டிநிற்க
அந்த மழை அழத்தொடங்கியது

பட்டினியும் பகல் உறக்கமும் அந்த
ஓலைமாளிகைக்குள்
ஒழிந்து பதுங்கியது
எழுந்து கொள்ள முடியவில்லை

உழைப்பால் பசிழயாறும்
கனவுகண்டேன் அந்த
கனவையும் அந்த பெருமழை
கூரையில் சத்தமிட்டு சதி செய்தே
என் மனம் சோர்ந்து கொள்ள
கொட்டித்தீர்த்தது

இராமச்சந்திரன் நிஜந்தன்



# நீலாவணை இந்திரா

தமிழ்நாடு வாசிகசாலை குழுமத்தின் சார்பில் நடைபெற்ற 50 வது கதையாடல் நிகழ்வில் எமது பகுதியை சேர்ந்த இளம் எழுத்தாளர் நீலாவணை இந்திரா அவர்களின் சித்தார்த்தன் கடவுளாகிறான் என்ற சிறுகதை குறித்த கலந்துரையாடல் கடந்த 02.01.2021 சனிக்கிழமை சென்னை திருவான்மிரில் நடைபெற்றுள்ளது.இது தொடர்பான உரை கவிதா இராஜகோபாலன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

கல்முனை பெரியநிலாவணையைச் சேர்ந்த இவரது எழுத்துக்களில் பண்பட்ட எழுத்தாளர் ஒருவரது பக்குவம் தெரிகிறது. சிறுகதை கவிதை சினிமா விமர்சனம் என பல துறைகளில் இவர் மிகுந்த ஈடுபாட்டுடன் தனக்கேயுரிய யதார்த்த பரர்வையுடன் எழுதிவருகின்றரர்.








சஞ்சீவி சிவகுமார், வே.அரவிந்தன்
sariththiramkalmunai@gmail.com

# நற்பிட்டிமுனையின் வரலாற்றுப் பின்புலத்தில் கல்வி முன்னெடுப்புக்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி........


சேனனது வம்சத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்தபின் இயக்கர்கள் விந்தனையை தலைநகராகக் கொண்டு கலிங்கர், சிங்கர், வங்கர் ஆகிய முக்குலத்தவரையும் அடக்கி முப்பது வருடங்கள் ஆட்சி செய்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் அதிகார வீழ்ச்சி காணப்பட்டமையையும் பதிவாகின்றது. கி. மு 205 க்குப் பின் எல்லாள மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டதாக இப்பிரதேசமும் இருந்ததது. கி.மு 82 களுக்குப் பின்னர் சிறிகுலனுடைய ஆட்சிக்காலத்தில் குருகுல நாகர்களுடைய ஆட்சி மட்டக்களப்பில் நிலை கொள்ளுகின்றது. ( மட்டக்களப்புத் தேசம் பக்.5) இதன் தொடர்ச்சியாக மனுநேயா கயவாகுவின் காலத்தில் நாகர்முனை என்படும் திருக்கோயிலில்



Naypattimooe..., a large and populous village, 17 miles south east of Batticalo, situated on the banks of the lake which runs up from the above town. It has a large store-house for paddy.

சித்திர வேலாயுதர் ஆலயம் புனர்நிருமானம் செய்யபட்டமையும் அதில் தேசத்தின் சிற்றரசர்கள் பதவி வழி முன்னிலைப்படுத்தப்பட்ட குறிப்புகளையும் மட்டக்களப்பு மான்மியம் சுட்டிக் காட்டுகின்றது. நற்பிட்டிமுனை வன்னிமை கோத்திரத்தாரின் தலைமைத்துவமே இவ்வாலயத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மாகோன் வகுத்த அரனூழிய முறைமைகளிலும் வன்னிய கோத்திரத்தார் முக்கியப்படுத்தப்படுகின்றார்கள். ஆந்நிய ஆதிக்கம் தொடங்கிய இடைமுகமாக கொள்ளக்கூடிய எதிர்ம[illegible] காலத்தில் நற்பிட்டிமுனை பணிக்கர் [illegible] முதன்மை பெறுவதை தாதன் கல்வெட்டில் அறிந்துணரலாம்.. எதிர்மன்னசிங்கன் காலத்தில் அண்ணாமலைச் செட்டியார் நற்பிட்டிமுனையின் மேற்குப்பகுதியில் கிட்டங்கி வீடுகள் அமைத்து வர்த்தகம் செய்த குறிப்பை மட்டக்களப்பு மான்மியத்தில் காண்கிறோம். அண்ணாமலைச் செட்டியார் நற்பிட்டிமுனை கல்லடிவெட்டைப் பகுதியில் வர்த்தக நோக்கில் தேக்கு மரக் காடுகள் வளர்த்து வாணிபம் செய்ததாகவும் இவரே நற்பிட்டிமுனை கந்தசுவாமி ஆலயத்தை உருவாக்கி நிருவகித்ததாகவும் ஆலய வரலாற்று ஆவணம் ஒன்று தெரிவிகிறது.



Batticalo, the chief town, and seat of the collector and provincial judge of the preceding district, is situated on an island 7° 43' north latitude, and 81° 50' east longitude. It is about three miles and a half in circumference, and is called by the natives Puliantive. The lake, or arm of the sea by which it is insulated, extends from the village of Naypattimoone, and is navigable for the country boats. It has a small square fort, built of coral stones, in which there is only a low barrack, a granary, a magazine, and a dwelling house for the commandant. The collector's house lies without the fort; and the village stands a few hundred yards from it, almost embosomed in topes of cocoanut trees. Though the streets cannot boast of [illegible] of grandeur or neatness, still the

1800களில் நற்பிட்டிமுனை மக்கள் செறிவு மிக்க பெருங்கிராமமாக இருந்ததாகவும், இதுவே மட்டக்களப்புடன் நேரடி போக்குவரத்துத் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் சைமன் காசிச் செட்டி தனது Ceylon Gazetteer நூலில் குறிப்பிடுகின்றார். இந்நூல் 1834 இல் வெளிவந்தது.

இவரது மற்றொரு குறிப்பில் மட்டக்களப்பு வாவி பற்றி கூறும் போது நற்பிட்டிமுனையில் இருந்து நீட்சியுற்றுவரும் வாவி எனும் குறிப்புள்ளது.

தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்ஜட்டுக்கு வாக்களித்தது ஏன்?

## காரணத்தை விளக்குகிறார் உறுப்பினர் விஜயரெத்தினம்

நேர்காணல்: கேதீஸ்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் சில விடயங்களில் புரிந்துணர்வு பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றது. இந் நிலையில் கல்முனை மாநகரசபையில் ஆட்சி செய்யும் முஸ்லிம் காங்கிரசின் வரவு செலவுத்திட்டத்தை நாம் எதிர்ப்பது தற்போது உகந்ததல்ல என்ற வேண்டுகோள் எங்களது கட்சி தலைமையால் முன்வைக்கப்பட்டிருந்தன. அதனால் ஆதரவாக வாக்களித்தோம்.

இவ்வாறு கல்முனை மாநகரசபையின் த.தே.கூட்டமைப்பின் சிரேஸ்ட உறுப்பினர் அ.விஜயரெத்தினம் கூறினார். பொது அமைப்புக்கள் கல்முனை மாநகரசபை வரவு செலவுத்திட்டத்தில் பட்ஜட் வாக்கெடுப்புக்கு தமிழ் உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டாம் என கோரிக்கை முன்வைத்திருந்தன. ஆனால் தாங்கள் ஆதரவாக வாக்களித்திருந்தீர்கள். தங்களின் இந்த முடிவுக்கான காரணம்? என்ன என்று கல்முனைநெற் மின்னிதழுக்கான நேர்காணலில் கேட்டபோதே அவர் மேற்கண்டாறு பதிலளித்தார். பொது அமைப்புக்கள் கல்முனை மாநகரசபை வரவு செலவுத்திட்டத்தில் பட்ஜட் வாக்கெடுப்புக்கு தமிழ் உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டாம் என கோரிக்கை முன்வைத்திருந்தன. ஆனால் தாங்கள் ஆதரவாக வாக்களித்திருந்தீர்கள். தங்களின் இந்த முடிவுக்கான காரணம்? என்ன என்று கல்முனைநெற் மின்னிதழுக்கான நேர்காணலில் கேட்டபோதே அவர் மேற்கண்டாறு பதிலளித்தார். கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்திற்கான தீர்வு தொடர்பாகவும் இரு கட்சிகளுக்கிடையில் இரு தரப்புக்கும் பாதிப்பில்லாதவகையில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. இந் நிலையில் கல்முனை மாநகரசபையில் ஆட்சியை மாற்றினால் அதாவுல்லாவின் கட்சி ஆட்சியமைக்கும். இதற்கு இடம்கொடுத்தால் எமது செயலக விடயத்திற்கான முஸ்லிம்தரப்புடனான பேச்சுக்கள் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டி ஏற்படும் இவ்வாறான காரணங்களால் நாங்கள் எதிராக வாக்களிக்கவில்லை. நாம் எதிராக வாக்களித்தாலும் ஆதரவாக வாக்களித்தாலும் முதல்வராக தமிழர் வரப்போவதில்லை என்றும் கூறினார். அவருடனான நேர்காணலை மின்னிதழ் வாசகர்களுக்காக தருகிறோம்.

**Q கேள்வி - கல்முனை மாநகரசபையில் வளப்பங்கீடுகள் எவ்வாறான நிலையில் உள்ளன?**

பதில்:கல்முனை மாநகர சபையின் வளப்பங்கீடுகளில் சில நடைமுறை ரீதியான தடங்கல்கள் சில பின்னடைவுகள் இருந்தாலும் முன்னய காலங்களில் இருந்ததை விட முன்னேற்றகரமாகத்தான் வளப்பங்கீடுகள் வழங்கப்படுகின்றன. காலப்போக்கில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை மூலம் ஏனையவற்றையும் நிவர்த்தி செய்வதற்கும் தமிழ் பிரதேசங்களுக்கு கிடைக்க வேண்டிய முழுமையான பங்கீட்டை எங்களுடைய கட்சியின் தலைமைப்பீடத்தின் ஆலோசனையுடன் பெற்று கொள்ளலாம் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது.

**Q கேள்வி - கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்காக உண்ணாவிரதம் இருந்தவர்களின் நீங்களும் ஒருவர் என்ற ரீதியில் தற்போது செயலக முன்னெடுப்பு விடயங்கள் எந்த கட்டத்தில் உள்ளன?**

பதில்: கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற உணவு தவிர்ப்பு போராட்டம் உண்மையாகவே அந்த இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டது ஆனால் ஒரு சில மனிதர்களும் சில அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் தேவைகளுக்காக அந்த மேடையை தவறாக பயன்படுத்தி கொண்டார்கள் என்பதே மிகவும் வேதனைக்குரிய விடயம்.

இருந்த போதிலும் தற்போது இருக்கின்ற அரசாங்கம் இங்கு வாழ்கின்ற இரண்டு இனங்களும் பாதிக்கப்படாமல் வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இந்த காத்திரமான நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறியக் கிடக்கின்றது. இவற்றை துரித படுத்துவதற்கு இரண்டு இனங்களிலும் உள்ள அரசியல் தலைமைகள் நியாயமான ஒரு தீர்வுக்கு வருவதுடன் அவற்றை நடைமுறைப் படுத்துமாறு அரசாங்கத்தை ஒன்றிணைத்து கோரிக்கை வைத்து ஊக்கப்படுத்த வேண்டும். இதுவே யதார்த்தமான உண்மையும் கூட. இவற்றுக்கு இரண்டு இனங்களின் பரஸ்பர நம்பிக்கை வரக்கூடிய செயற்ப்பாடுகள் அவசியம்.

**Q கேள்வி - எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் போட்டியிட வேண்டும் என்ற கருத்து பொது அமைப்புக்களால் முன்வைக்கப் பட்டு வருகின்றது இது தொடர்பில் தங்களின் தனிப்பட்ட கருத்து ?**

பதில்:இதைத்தான் எங்களை போன்றவர்கள் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருகின்றோம். இவை தான் கிழக்கு தமிழர்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களும் கூட .இவற்றை அடைவதற்கு பொது அமைப்புகள் தமிழ் அரசியல் கட்சிகளை அணுகி எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொது உடன்பாட்டுக்கு வருவதற்கு அனுசரணையாளர்களாக செயற்பட வேண்டும். அதை விடுத்து நாங்கள் சொல்கிறபடிதான் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்கிற சர்வாதிகார திணிப்பு தான் கடந்த காலங்களில் பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட இது சம்பந்தமான முயற்சிகள் தோல்வி அடைந்தமைக்கு காரணமாக அமைந்தது.

# கல்முனை மாநகரசபையை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்

## வேதனையுடன் கூறினார் சாய்ந்தமருது உறுப்பினர் அசீம்.

கல்முனைமாநகரசபையில்நடக்கும்அராஜகஆட்சிஊழல்கள்மற்றும்கையூட்டல்களைப்பார்க்கும்போதுஇனிமேல் இம்மாநகரசபையை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்றுகல்முனைமாகரசபையின்சுயேச்சைஉறுப்பினர் ஏ.ஆர்.எம்.அசீம்வேதனையுடன் கூறினார். கடந்ததேர்தலில் சாய்ந்தமருதுக்கெனதனியானநகரசபை அந்தஸ்தைக்கோரி தோடம்பழச்சின்னத்தில் சுயேச்சையாகபோட்டியிட்ட அணியில்9பேர் மாநகரசபைக்குத் தெரிவாகினர். அந்தஅணிக்குத்தலைமைதாங்கி வழிநடாத்தியவர்ஜனாப்.அசீம் ஆவார். கல்முனைநெற் மின்னிதழின்இவ்வாரஇதழுக்காக அவருடன்மேற்கொண்ட நேர்காணலைத் தருகிறோம்.

நேர்கண்டவர்: வேதசகா



**Q கேள்வி:கல்முனைமாநகர சபைக்கு நீங்கள்சென்றநோக்கம் நிறைவேறியதா?**

பதில்: நாம் உண்மையில் அரசியல் செய்யச்செல்லவில்லை. மேயராகவும் ஆசைப்பட்டதில்லை. சாய்ந்தமருதுக்கெனதனியானநகரசபை நிருவாகத்தைப் பெற்றெடுப்பதற்கான ஒரு உபாயமாகவேசென்றோம்.மாநகரசபைமுன்னர் சனத்தொகைகுறைவாகஇருந்தது. அப்போதுசேவைகள்நன்றாகஇருந்தது.சனத்தொகைகூடியதும் பல பிரதேசங்களை உள்ளடக்கிய மாநகரசபைக்கு சேவைசெய்வதுசிரமமாகும்.தேவைகள் கூட சேவைகள் குறைய.அதனால்நாம் போட்டியிடநேர்ந்தது. மேலும்எமதுதனிநகரசபைக்கோரிக்கையை மஹிந்த ரணில்தொடக்கம் அனைவரும் வெறும் வாக்குறுதியளித்தார்களே தவிரஎதையுமே செய்யவில்லை. அதனால் அரசியலில்சுயாதீனமாகஇறங்களண்ணி தேர்தல்கேட்டோம். 9பேர்வந்தோம்.

சாய்ந்தமருது முஸ்லிம்கள் இல்லாமல்மேயராகமுஸ்லிம் ஒருவர்வரலாம் என்பதைநாம் பகிஸ்கரித்து நிரூபித்துக்காட்டினோம். அதற்குப்பிவாங்குகிறார்கள்.

**Q கேள்வி: எந்தவகையில்பழிவாங்கல்நடக்கிறது என்று கூறமுடியுமா?**

பதில்:வெட்கமாகஇருக்கிறது. இதுவரை காலமும்நாம் அங்கு மக்கள் பிரதிநிதியாக இருந்து பெற்றதுஆக 15-20 மின்குமிழ்கள்மாத்திரமே. வேறு ஒன்றுமே தரவில்லை.கோடிக்கணக்கில் வருமானம் வரும் சபையிலிருந்து சாய்ந்தமருதுக்கு ஒரு சதக் காசுகூட ஒதுக்கீடு இடம்பெறவில்லை.நாம் 9 உறுப்பினர்களும்எமதுகொடுப்பனவில் மின்விளக்குகளை பொருத்திவருகிறோம்.

**Q கேள்வி:கடந்த பட்ஜட்வாக்கெடுப்பில் நீங்கள் தற்போதையமேயருக்கு எதிராகவாக்களித்தமைக்கானகாரணம்என்ன?**

பதில்: அங்கு ஒருமாபியாநடக்கிறது. எந்தவொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்படுவதில்லை. ஒதுக்கீடுகளும் சர்வாதிகாரத்தன்மையாகதான்தோன்றித்தனமாகவேநடக்கிறது. இதன்காரணத்தால்சபையின் தலையெழுத்தைமாற்றவேண்டுமென்பதற்காக எதிர்த்துவாக்களித்தோம்.

**Q கேள்வி: அப்படியானால் தோற்றதற்கானகாரணம்என்ன?**

பதில்: கூடஇருந்து குழி பறித்து காரணத்தால் என்று அடித்துக்கூறுவேன். 41பேர் உள்ள சபையில்26பேர் எதிர்க்கட்சியாகஇருக்கிறோம். எம்முடன் த.தே.கூட்டமைப்பு அ.இ.ம.காங்கிரஸ் அனைவரும் எதிர்த்துவாக்களிப்போம் என்ற முடிவுடன்தான் சென்றோம்.

அங்கு த.தேகூட்டமைப்பின் 5பேரும் அ.இ.ம.காங்கிரசும் காலைவாரிவிட்டனர். த.தே. கூட்டமைப்பை நம்பித்தான் கடந்தகாலங்களில் ஒன்றாகபயணித்தோம். சமுகத்திற்கம் உரிமைக்காகவும்போராடுவோம்என்றுகூறிவிட்டுஉறுப்பினர் ஹென்றிஉள்ளிட்ட 5பேர்அவர்களதுபுத்தியைக்காட்டிவிட்டனர். தமிழ்மக்களைப்புறக்கணித்துவரும் மேயருக்குஅல்லக்கையாகஹென்றிசெயற்பட்டிருக்கிறார். அவர்எமக்குமட்டுமல்லஒட்டுமொத்ததமிழ்ச்சமுகத்திற்கும் துரோகமிழைத்துள்ளார்.அவரொருசுயநலவாதி.

அதற்குள் உறுப்பினர்களானராஜன்சிவலிங்கம்ஆகியோர் சொன்னசொல்லைக்காப்பாற்றிய மானஸ்தர்கள்என்பேன்.இவர்கள்தான்தமிழ்மக்களுக்கான உண்மையான சேவையாளர்கள். இனியாவது இவர்களைப்போன்றவர்களுக்கு வாக்களித்துசபைக்குஅனுப்புங்கள்.

**Q கேள்வி:மேயர்ஊழல் செய்கிறார் என்று கூறினீர்கள். அது பற்றிக்கூறமுடியுமா?**

பதில்: நாம் அது பற்றி விலாவாரியாக ஆளுநர் தொடக்கம் உள்ளுராட்சிஆணையர்வரை எடுத்துக்கூறி தரவுகளுடன் கொடுத்திருக்கிறோம். அண்மையில் அ.இ.ம.கா.உறுப்பினர்மனாப் கூடபகிரங்கமாக ஊடகங்களுக்குமேயரதுஊழல் தொடர்பாகஆதாரபுர்வமாககூறியிருந்தார்.

கோடிக்கணக்கில் வருமானம்பெறக்கூடிய சபைஇது. இந்த சபைக்கென ஒருமடுவம்இல்லை. ஆனால் இம்மடுவங்களை நடாத்த தனியாருக்கு 50லட்சருபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.இதன்கொமிசன் அவர்களுக்கு போய்ச்சேர்கிறது.

அதுபோலமலம்எடுக்கும்கலிசக்கர்சேவையை தனியாரொருவருக்கு 40ட்சருபாவுக்கு வழங்கியுள்ளனர்.அதன் கொமிசனும்கிடைக்கிறது. ஆனால் இதனைப்பார்வையிடமாநகரசபை ஊழியர்கள் செல்கிறார்கள்.

இவற்றை மாநகரசபைஏன் செய்யமுடியாது? உழைக்கமுடியாது?மக்களின்வரிப்பணத்தில்சபை நடாத்தவேண்டியதில்லை.மார்க்கட்மேற்படி இரண்டுசேவைகள் இவ்வாறு பல மார்க்கங்கள்உள்ளன. மாதம் ஒன்றரைகோடிருபாவருமானம்பெறலாம். அவற்றைச்செய்யாமல்தங்களதுபொக்கட்டுகளை நிரப்புகிறார்கள்.

கடந்தாண்டு மாத்திரம் சாய்ந்தமருதில் 904 காணிஉறுதிகள் எழுதப்பட்டன. 1லட்சத்திற்கு 3000ருபாமுத்திரைவரிஎன்றால் 904ஒ3000 எவ்வளவு வரும்? இந்தப்பணம் எங்கே?

**Q கேள்வி: இவற்றையெல்லாம்சபையில்கேட்பதில்லையா? அங்கு ஊடகங்களில் கூறுவதில்லையா?**

பதில். ஹன்சாட்டைப்பாருங்கள்.சபையில் கேட்டுக்கேட்டுஅலுத்துவிட்டது. இவையெல்லாம்ஊடகங்களில் வருவதில்லை. நான் ஒரு தடவை கேட்டபோதுஅவருக்குவிருப்பமான ஊடகவியலாளர்களைமட்டுமேஅனுமதிப்பாராம்.

கேள்வி:பழிவாங்கல்நடைபெறுவதாகச் சொன்னீர்கள்.சரிசாய்ந்தமருதுக்குகுப்பைஅள்ளவருகிறார்கள்தானே?

பதில்: வருகிறார்கள். ஒருவீதிக்கு14நாட்களுக்கொருதடவையே வருகிறார்கள்.எனது வீட்டிலேயே7நாள் குப்பையுள்ளது.சாய்ந்தமருது மக்கள் சபைக்குரியவரிகள் அனைத்தையும்செலுத்திவருகிறார்கள். மாகரசபைக்குரியபிரதானசேவையாகிய திண்மக்கழிவகற்றல்பணியையேஇப்படி மோசமாக செய்வதுஎன்றால்பாருங்கள்.

**Q கேள்வி: இறுதியாக என்னதான் சொல்லவருகிறீர்கள்?**

பதில்: இத்தகைய விடயங்களை வெளிக்கொணரும் கல்முனைநெற் மின்னிதழுக்கு கோடிநன்றிகள். இவ்வாறு பல விடயங்களுள்ளன. அவ்வப்போது தருவேன். மாநகரசபையிலிருந்து எப்போது சாய்ந்தமருது நகரசபையாக பிரிகிறதோ அன்று மாநகரசபைக்கு சாய்ந்தமருதால்ஒருசதக் காசு கூட கடன் இல்லாத நிலை இருக்கும். எனவே இனியாவது இனமதபேதமில்லாத பிரதேசவேறுபாடு பார்க்காத சேவைகளைச்; செய்ய மேயர் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் எமது ஊடகவெளிக்காட்டல்கள் தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கழிவிரக்கம்

பிஞ்சுக் கைகளின்
பொத்திய விரலிடுக்கினூடு
வழிகிறது -இரக்கம்

கருமேகம் கவிந்த
அந்தர வெளியிலிருந்து
பிரவகிக்கிறது
தாகத்தின் ஊற்று

வரண்ட நாவும்
அதீதங்களின் அவாவுகையும்
கவிழ்கிறது -என் மேல்
ஏந்தும் கரங்கள்
நடுங்கி வழிகின்றன
தங்க முடியா
நீர்த் திவலையில்
தத்தளிக்கிறது-மனது

ஒட்டிய வயிறும்
சாம்பல் பூத்த அடுப்பும்
அடுத்த வேளைச் சோற்றுக்காய்
கழிவிரக்கம் கொள்கிறது
- மலரா-

# வன்முறையற்ற அணுகுமுறை

வன்முறை என்பது அதிகாரம் கூடிய நபர் அதிகாரம் குறைந்த நபர் மீது பிரயோகிப்பதாகும். வன்முறையின் விளைவுகள் விபரீதமானதாக அமையும். பிரச்சினை என்னைத் தேடி வருகிறது. நான் என்ன பாவம் பண்ணினேன் நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்று அலைகிறேன்.நேரம்,பணம்,காலம் என்று விரயமாகிறது. நிம்மதியாக வாழ முடியவில்லை. மனநோயாளியாகிடுவேனோ என்று கண்ணீர் சிந்துபவர்களையும் காண்கின்றோம்.

வன்முறையற்று வாழ்வது எப்படி என்ற கேள்வி பலரிடம் எழுகின்றது. இது ஒரு இலகுவான விடயம்.

அதாவது இரு நபர்களுக்கிடையில் ஒரு சம்பவம் இடம்பெறும் போது ஒரு நபர் மீது மற்ற நபருக்கு ஒரு தீய உணர்வு ஏற்படும் அதனால் அவரைப் பற்றி தவறாக தீர்ப்பிடல் செய்வார்.

அதன்பிறகு அவருக்கு ஏதாவது தண்டனை வழங்குவார். அந்த தண்டனையால் மீண்டும் ஒரு சம்பவம் நடக்கும். இது வன்முறை வட்டம். இதனால் வன்முறை தொடர்ச்சியான நிகழ்வாகவே இடம்பெறும்.

எனவே நாம் வன்முறையற்று வாழ விரும்பினால் வன்முறையற்ற அணுகுமுறையை பின்பற்றலாம். ஒரு சம்பவம் நடக்கும் போது ஒரு உணர்வு ஏற்படும்.அந்த இடத்தில் நாம் சிந்திக்கவேண்டும் இந்த பிரச்சினைக்கு நான் எந்த விதத்தில் காரணம் அதை நான் தவிர்த்துக்கொண்டால் இந்த சம்பவம் தொடராமல் நிறுத்தப்படும். பிழையான தீர்ப்பிடலும் இடம்பெற வாய்ப்பில்லை. அதனால் தண்டையும் இல்லை. மாற்றம் என்பதை நாம் மற்றவரிடம் எதிர்பார்ப்பது தான் நாம் ஒவ்வொருவரும் செய்யும் பிழை.மற்றவரை விட நாம் மாறுவது மிகவும் இலகுவானது. நாம் மாறும் போது நமது குடும்பம் மாறும். எமது சமூகம் மாறும். அது எமது நாடு என்று வன்முறையற்ற நாடாக மிளிரும்.

எனக்கு காய்ச்சல் வந்தால் நான் தான் பனடோல் போடவேண்டும் எனக்கு கோபம் வந்தால் நான் தான் கட்டுப்படுத்த வேண்டும். ஒரு விரல் மற்றவரை சுட்டி காட்டும் போது மூன்று விரல்கள் நம்மைச் சுட்டி நிற்கும். எனவே நமது தவறுகளை நாம் திருத்த வேண்டும்.

எனவே எமது எண்ணங்கள் நல்லெண்ணங்களாக அமையும் போது நடத்தைகள் நல்லதாகவே அமையும். நடத்தைகள் நல்லதாக அமையும் போது செயற்பாடுகள் மிகவும் சிறந்ததாக அமையும்.

உதாரணமாக ஒரு மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் முரண்பாடு. ஒரு நாள் மாமியார் இருந்தால் கணவனோடு தான் நிம்மதியாக வாழ முடியாது என நினைத்த மருமகள் மாமியை கொலை செய்யவேண்டும் என்று ஒரு பரிசாதியாரிடம் உதவி கேட்டார். அவரும் ஒரு மருந்தை கொடுத்து ஆறு மாதத்தின் பிறகு வந்து சந்திக்க சொன்னார். நீ இதை கொடுத்து அவர் இறந்த பின்னர் கொலைப்பழி உன்மீது வரும்.அதனால் அவருடன் அன்பாக நடப்பது போல் நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார். அதனைக் கேட்ட மருமகள் மாமியின் உடைகளை கழுவி கொடுத்தார். உணவு சமைத்துக்கொடுத்தார். கோயிலுக்கு, உறவினர் வீடுகளுக்கு சேர்ந்து சென்றனர்.இதனைப் பார்த்த மாமிக்கு மருமகள் மீது பாசம் கூடியது. அவரும் மருமகளுக்கு உடைகள் வாங்க கொடுத்தார். அன்பாக பழகினார். ஆறு மாதங்கள் முடிவடைந்தது. மாமி இறக்க போகிறார்.என் தாய் போல் என்னை பார்த்த என் மாமி இறந்தால் என்னால் வாழவே முடியாது. என் மாமி எனக்கு வேண்டும் என்று பரிசாதியாரிடம் கூறினார். உன் மாமி இறக்க மாட்டார் அவர் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ கூடிய மருந்துகள் தான் நான் தந்தேன் என்று பரிசாதியார் கூறினார். அன்பை நாம் மற்றவர் நம் மீது காட்ட வேண்டும் என்று தான் நினைப்போம். அதனை நாம் முதலில் காட்ட முயற்சித்தால் முரண்பாடற்ற அமைதியான வாழ்க்கை வாழ முடியும்.

ஜெனிதா மோகன்
நற்பிட்டிமுனை

## மங்கையர் மகுடம்

Dr.புஸ்ப்பலதா லோகநாதன், ஜெனிற்ரா மோகன்
nilanthiniravichandran@gmail.com,
jenikabishan@gmail.



## மயில்

நீண்ட சொண்டுடையாள்-அவள்
அழகின் இலக்கணமாம்
சிங்காரித்துசிறகைவிரித்து
கொட்டும்மழையிலே-ஆடுமாம்ஆணினம் கொண்டைக்காரிஅகவிக் கொண்டே
பாம்பும்நடுங்கிடவாழுமாம்காட்டிலே
அழகு-இவளின்சொந்தம்
அழகு-இவளின்கர்வம்
அழகு-என்றுமேஇவளின் அடையாளம்







# விடுகதைகளும்-விடைகளும்

கீழேயும்மேலேயும்மண்நடுவிலே[illegible]னபெண். அதுஎன்ன?
மஞ்சல்செடி

சொன்னநேரத்துக்குதொண்டைகிழியகத்துவான்.அவன் யார்?
அலாரம்

உயிர்இல்லாதநீதிபதியிடம்ஒழுங்கானநியாயம்.அவன் யார்?
தராசு

பூவோடுபிறந்து,நாவோடுகலந்துவிருந்தாவான்மருந்தாவான்.அவன்யார்?
தேன்

நூல்நூற்கும்நெசவாளிக்குகட்டிக்கொள்ளதுணியில்லை.அதுஎன்ன?
சிலந்தி

உடம்பெல்லாம்சிவப்பு,அதன்குடுமிபச்சைஅதுஎன்ன?
தக்காளி

ஒட்டுத்திண்ணையில்பட்டுப்பாவாடைஅதுஎன்ன?
தோடு

தலைக்குள்கண்வைத்திருப்பவன்இவன்மட்டும்தான்அவன்யார்?
நுங்கு

செய்திவரும்பின்னேமணியோசைவரும்முன்னேஅது என்ன?
தொலைபேசி

வாயிலிருந்துநூல்போடுவான்மந்திரவாதியும்இல்லைகிளைக்குகிளைதாவுவான்குரங்கும்இல்லைவலைவிரித்து பதுங்குவான்வேடனும்இல்லைஅவன்யார்?
சிலந்தி

எவர்கையிலும்சிக்காதகல்எங்கும்விற்காதகல்அது என்ன?
விக்கல்

குண்டுச்சட்டியில்குதிரைஓட்டுவான்அதுஎன்ன?
கரண்டி

அடிக்காமல்திட்டாமல்கண்ணீரைவரவழைப்பாள்அவள் யார்?
வெங்காயம்

பாலிலேபுழுநெளியுதுஅதுஎன்ன?
சேமியாபாயாசம்

வளைந்துநெளிந்துசெல்பவள்வழியெங்கும்தாகம்தீர்ப்பாள்அவள்யார்?
ஆறு

மேலிலும்துவாரம்,கிழிலும்துவாரம்,இடத்திலும்துவாரம்,உள்ளிலும்துவாரம்,வெளியிலும்துவாரம்இருந்தும்நீரை என்னுள் சேமித்துவைப்பேன்.நான்யார்?
பஞ்சு

ஆழிக்குழிதோண்டிஅதிலேஒருமுட்டையிட்டுஅண்ணார்ந்துபார்த்தால்தொண்ணுறுமுட்டைஅதுஎன்ன?
தென்னை

சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன?
கொசு

மழையில் பிறந்து வெயிலில் காயுது அது என்ன?
காளான்

அடித்தாலும் உதைத்தாலும் அவன் அழமாட்டான் அவன்யார்?
பந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் தனிநபருக்கு இடையேயான வாக்குவாதம் இன மோதலாக மாறிய கோடூரம்; அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு

சூடானில் இரு தரப்பை சேர்ந்த பழங்குடியினருக்கு இடையே நடந்த மோதலில் 83 பேர் கொல்லப்பட்டதால் அங்கு ஊரடங்கு அமல்படுத்தப் பட்டுள்ளது.

பழங்குடி இனங்கள் வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் பரவி காணப்படுகின்றனர். இந்த பழங்குடி இடங்களில் உள்ள மக்களுக்குள் அடிக்கடி மோதல் ஏற்படுவது வழக்கம். இந்நிலையில் டார்பூர் மாகாணத்தின் தலைநகர் அல்ஜெனீனாவில் வசிக்கும் மசாலித் என்ற பழங்குடியினருக்கும், அராபி என்ற பழங்குடியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு விட்டது. இந்த இரு தரப்பு பழங்குடியினரை சேர்ந்த தனிநபருக்கு இடையேயான வாக்குவாதமானது, கோஷ்டி மோதலாக மாறி விட்டது.

இந்த சண்டையில் இரு தரப்பை சேர்ந்த பழங்குடியினரையும் ஒருவரை ஒருவர் சரமாரி காக்கி கொண்டதோடு, மற்றவர்களின் வீடுகளை சூறையாடி தீ வைத்து எரித்தனர். அவர்களுக்குள் நடந்த இந்த சண்டையானது இரண்டு நாட்கள் நீடிக்கபட்டதோடு, 83 பேர் கொலை



செய்யப்பட்டனர். மேலும் இதில் 160க்கும் மேற்பட்ட அதிரடி படை வீரர்கள் காயமடைந்தனர்.இதனால் அமைதியை ஏற்படுத்தும் வகையில் டார்பூர் மாகாணத்தில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அதோடு அந்த மாகாணத்தில் பொது மக்களின் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு உயர்மட்ட அதிகாரிகளை சூடான் அரசு அந்த மாகாணத்திற்கு அனுப்பியுள்ளது.

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சர்வதேச மனித அபிவிருத்தி அறிக்கை இலங்கையில் அறிமுகம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சர்வதேச மனித அபிவிருத்தி அறிக்கை இலங்கையில் அறிமுகம்

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் (ஐஎன்டீபீ), சர்வதேச மனித அபிவிருத்தி அறிக்கை (ஏஜீ) அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் அரசாங்க, பொது மற்றும் தனியார் துறை, அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் (இகுஙீஎண்) போன்றவற்றின் உயர்மட்ட பிரதிநிதிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.30 வருடபூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்ட மனித அபிவிருத்தி அறிக்கை 2020 இன் தலைப்பு கூடனு யீஜுதுணு ஊஹுாணிணறுஹுஹு: ஏதச்சுண ஈஹுதிஹுஃணிணீ ஹுணஞ சுணஞீ ஞுடது அஙடஞுடஹுாணிணீஹிஹுஹு" என்பதாக அமைந்திருந்ததுடன் இதில் புதிய சோதனை வழி சுட்டெண்ணான புவிசார் அழுத்தங்கள் - சீரமைக்கப்பட்ட மனித அபிவிருத்தி சுட்டெண் (கஏஹ) என்பது உள்ளடக்கப்பட்டிருந்தது. இது நாடுகளின் காபனீரொட்சைட் வெளியீடுகள் மற்றும் காபன் வெளியீடுகளில் கவனம் செலுத்துவதாக அமைந்திருந்தது. தெற்காசிய பிராந்தியத்தின் முன்னிலையை இலங்கை தன்வசப்படுத்தியிருந்ததுடன் உலகின் 169 நாடுகளில் 34 நிலைகள் முன்னேறி புதிய நிலையையும் எய்தியிருந்தது.

எம்மைச் சூழவுள்ள காணி மற்றும் சூழலின் இழப்பில் மனித அபிவிருத்தி என்பது வரலாற்று ரீதியில் இடம்பெற்றுள்ளது. கொவிட்-19 தொற்றுப் பரவல் என்பது உலகம் எதிர்நோக்கியுள்ள பிந்திய இடர் லையாகும்.மனிதர்கள் சூழலுக்கு ஏற்படுத்தும் அழுத்தம் குறையாத பட்சத்தில் இதுவே இறுதியானதாகவும் அமைந்திருக்காது என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித அபிவிருத்தி சுட்டெண்ணில் 189 நாடுகள் வரிசையில் இலங்கை 72 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. 0.782 புள்ளிகள் எனும் உயர் மனித அபிவிருத்தியைக் கொண்டுள்ளது. ஆனாலும் தன்னிறைவுக்கு போதியளவு காலமில்லாமலுள்ளது. ஏனெனில் காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படக்கூடிய நாடுகள் வரிசையில் இலங்கை 6ஆம் இடத்தில் காணப்படுகின்றது. மனித அபிவிருத்தியுடன் புவியின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலையில் இலங்கை காணப்படுகின்றது.

மெய்நிகர் அறிமுக நிகழ்வின் போது அறிக்கையை பெற்றுக் கொண்டு மின்சக்தி அமைச்சர் டலஸ் அலஹப்பெரும குறிப்பிடுகையில் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களால் புதிய தொழிற்துறைகளை உருவாக்கக்கூடிய வகையிலான சூழலுக்கு நட்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இலங்கை அரசாங்கம் முயற்சி செய்கின்றது. புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாக எம்மால் குறைந்த செலவிலமைந்த குறைந்த காபன் வெளியீட்டிலான வலுவை பிறப்பிக்க முடியும். சூழலுக்கு நட்பான பொருளாதாரத்தினால் வலுப் பாதுகாப்பு, சூழல் மற்றும் பொது சுகாதாரம் போன்றன மேம்படுத்தப்படுவதுடன் அதிகளவு தொழில் வாய்ப்புகளை உருவாக்கக்கூடியதாகவும் இருக்கும்.ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச அவர்களின் சிந்தனைக் கமைய எமது சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் சூழல் பாதுகாக்கப்படுவதை நாம் உறுதி செய்ய எம்மை அர்ப்பணித்துள்ளோம். சூழலுக்கு நட்பான பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஒழுங்கிணைப்பு நடவடிக்கைகளை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஜுகம் கருத்துத் தெரிவிக்கையில் சூழலுக்கு நட்பான அபிவிருத்தி சிந்தனையில் கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள சமூக-பொருளாதார தாக்கங்களை கவனத்தில் கொண்டு தேசிய அபிவிருத்தித் திட்டமொன்றை வரையறுத்து செயற்படுத்துவதற்கு இலங்கைக்கு உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தன்னை அர்ப்பணித்துள்ளது. சூழலுக்கு நட்பான அபிவிருத்தி வழிமுறையை எய்துவதற்கு அரசாங்கம், தனியார் துறை,சிவில் சமூகம், கல்விமான்கள்,அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் எமது சக ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தன்னை அர்ப்பணித்துள்ளது. என்றார்.

# சீனாவில் ஐஸ்கிரீமில் பரவும் கோரோனா தொற்று! - சீனாவில் அதிர்ச்சி..

உலகை அச்சுறுத்தி வரும் கரோனா தொற்று முதன்முதலாக பரவத் தொடங்கிய சீன நாட்டில், தற்போது ஐஸ்க்ரீமில் கரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியைக் கிளப்பியுள்ளது.

வடக்கு சீன நகரமான தியான்ஜினில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீமின் குறைந்தது ஐந்து மாதிரிகளில் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், கொரோனா வைரஸான சார்ஸ்-கோவி -2 இன் தடயங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாதிரிகள் எடுக்கப்பட்ட ஐஸ்க்ரீம் அட்டைப்பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஏற்கனவே விற்கப்பட்ட ஐஸ்க்ரீம்களும், அதனை சாப்பிட்டவர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள



## உலக வலம்

சபா தயாபரன்

Sabathayaparan@gmail.com

னர். இருப்பினும், இதுவரை யாருக்கும் ஐஸ்க்ரீம்களால் கரோனா தொற்று ஏற்பட்டதாக தகவல் இல்லை என சீனா தெரிவித்துள்ளது. மேலும் ஐஸ்க்ரீம் நிறுவனத்தின் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்குக் கரோனா தொற்று பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

ஐஸ்கிரீம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உக்ரேனிய பால் பவுடர் சாத்தியமான ஆதாரமாக இருக்கலாம் என்று ஒரு விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த ஐஸ்க்ரீம்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் நியூசிலாந்து மற்றும் உக்ரைனில் இருந்து வருவதால், அந்த மூலப்பொருட்கள் மூலமாக ஐஸ்க்ரீம்களில் கரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சீனா கூறியுள்ளது.

உறைந்த உணவில் இருந்து கோவிட் -19 ஐப் பிடிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறியுள்ள நிலையில் நவம்பரில், சீனாவின் தியான்ஜின் நகரைச் சேர்ந்த ஒரு கனரக ஓட்டுநர் கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டார், அவர் கையாண்ட வட அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பன்றி இறைச்சியிலும் கரோனா தொற்று காணப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# கட்டாரில் வாகன தொழில்நுட்ப சோதனையை மேற்கொள்ளதற்காலிக நிலையம் அமைப்பு.!



கத்தார்பல்கலைக்கழகத்தின்வடக்கேஉள்ள Wadi Al Banat பகுதியில்வாகனங்களின்தொழில்நுட்பசோதனையைமேற்கொள்ளதற்காலிகமொபைல்நிலையம்அமைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையம்ஞாயிற்றுக்கிழமைமுதல்வியாழக்கிழமைவரைகாலை6மணிமுதல்மதியம்12மணிவரையிருக்குமெனகத்தார்உள்துறைஅமைச்சகம்ட்விட்டரில்தெரிவித்துள்ளது.

# கட்டாரில் பாதசாரிகளுக்கு விடுக்கும் எச்சரிக்கை 500 றியால்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம்!

கத்தாரின் பாதைகளில் உள்ள உரிய பாதசாரிக் கடவைகளைப் பயன்படுத்தாமல் விரும்பிய இடங்களால் பாதைகளைக் கடக்கும் பாதசாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கத்தார் குடிமக்கள் இது தொடர்பாக பிரச்சாரத்தை ஆரம்பிக்கும் படி அழைப்பு விடுத்துள்ளதாக கத்தார் செய்தி நாளிதழான அல் ராயா தெரிவித்துள்ளது.

சல்வா வீதி, செனயா வீதி, வடக்கு வீதி மற்றும் முக்கிய அதிவேக வீதிகளில் கூட பாதசாரிகள் ஒதுக்கப்பட்ட உரிய இடங்களால் கடக்காமல் வாகனங்களுக்கு முன்னால் ஆபத்தான முறையில் கடப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பல பாதசாரிகள் பாதசாரி சுரங்கப்பாதைகள் இருந்தும், அதனைப் பயன்படுத்தாமல் பாதை வேலிகளுக்கு மேலால் ஏறிப் பாய்ந்து கடப்பதாக அல் ராயா புகைப்படக்

அபராதங்களின் விபரம்.

1. சாலைகளின் விளிம்பில் நடப்பது, அல்லது சைக்கிள்களுக்கு ஒதுக்கப்பட்ட தடங்களில் நடப்பது, அல்லது பாதசாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட திசையில் நடக்காமல் இருத்தல் போன்ற குற்றங்கள் செய்து பிடிபட்டால் 100 ரூபாய்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

2. பாதையைக் கடக்கும் போது முன்னெச்சரிக்கையுடன் செயல்படத்தவறி பிடிபட்டால் 200 றியால்கள்

3. பாதசாரி போக்குவரத்து சமிக்ஞைகளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் 500 றியால்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம் என்பதாக அல் ராயா தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## புலம் பெயர் செய்திகள்

சுவிஸ் - இரா.விஜயகுமாரன் vije0113@Gmail.com
பிரான்ஸ்- க.முருகானந்தன், மா.தேவமனோகரன் kbabup@hotmail.fr
கனடா-என்.விஜயரெட்ணம், ப.பிறேம் viejay1@hotmail.com Preman167@gmail.com
ஜேர்மனி -இரா.நிர்மலதாசன் jeyadhas248@yahoo.de
டென்மார்க்- ந.நரேந்திரராஜா naren001@hotmail.com
இலண்டன் - க.பிரதீப் Nklp.theep@yahoo.com
மத்திய கிழக்கு - அ.ரவி, பா.மேனன் aravi069@gmail.com, jakan20130701@gmail.com

# ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம்

## ஜேர்மனியின், ஹம் நகரில் அமைந்துள்ள காமாட்சி அம்மன் கோயில்

ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம் (Hindu Kamadchi Ampal Temple, Hamm Germany) என்பது ஜெர்மனி நாட்டிலுள்ள ஹம் நகரில் அமைந்துள்ள காமாட்சி அம்மன் கோவிலாகும். ஐரோப்பிய கண்டத்திலேயே இரண்டாவது பெரிய இந்துக் கோயிலான இக்கோயில் திராவிடக் கட்டிடக்கலையில் கட்டப்பட்டு 2002 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது காமாட்சி அம்மனுக்கு இந்தியா மற்றும் தென் ஆசியா பகுதிகளுக்கு வெளியே அமைந்துள்ள ஒரே கோயிலாகும். நோர்த்ரைன் வெஸ்ற்பாலியா(Nordrhein&Westfalen)என்ற மாகாணத்தில் ஹம் உயின்றோப் (Hamm Uentrop) எனும் நகரில் இக் கோயில் அமைந்துள்ளது.



ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம்

காஞ்சி காமாட்சியம்மன் கோயில் வழியில் பதினைந்து ஏக்கர் பரப்பளவில் கிழக்கு பார்த்த கோயிலாக அமைந்துள்ளது. இக்கோயிலில் சிவன், விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகன், லட்சுமி நாராயணர், நவக்கிரகம், ஐயப்பன் மற்றும் பைரவர் சந்நிதிகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிகழும் தேர்த்திருவிழா மிகவும் புகழ்பெற்றதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




### அவுஸ்திரேலியா இந்தியா டெஸ்ட் தொடர் 2 1 என்ற அடிப்படையில்

# இந்தியா வெற்றி

அவுஸ்திரேலியாவில் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 19 ஆம் திகதிவரை நடைபெற்ற இந்தியா மற்றும் அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியில் மூன்று விக்கட்டுக்களால் வெற்றியீட்டி 21 என்ற அடிப்படையில் தொடரை இந்தியா கைப்பற்றியது. இதில் ஒரு போட்டி சமநிலையில் முடிவுற்றிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 369 ஓட்டங்களுடன் சகல விக்கட்டுக்களையும் இழந்தது அதனை தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்தியா 294 ஓட்டங்களுடன் சகல விக்கட்டுக்களையும் இழந்தது மீண்டும் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா 336 ஓட்டங்களை பெற்றிருந்தனர். 328 ஓட்டங்களை பெற்றால் இந்தியா வெற்றி பெறும் இலக்கோடு களமிறங்கி 329 ஓட்டங்களை பெற்று 3 விக்கட்களால் வெற்றியை பெற்றது . போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியைச்சேர்ந்த ரிசாட் பண்ட் தெரிவு செய்யப்பட்டார்.

அவுஸ்திரேலியா பிரிஸ்பென் மைதானத்தில் 33 வருடங்களின் பின்னர் அவுஸ்திரேலியா அணியை தோல்வியடைச்செய்த பதிவையும் இந்தியா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கை கிரிக்கெட்டில்

# புதிய சர்ச்சை!

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் ஒருவருக்கும், அணியின் பெண் மருத்துவ பணியாளர் ஒருவருக்கும் இடையிலான தவறான நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை குறித்து உடனடியாக அறிக்கை அளிக்க வேண்டும் என இலங்கை கிரிக்கெட நிர்வாகம் அணியின் முகாமையாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் முகாமையாளர் அசந்த டி மெல்லின் அறிக்கை கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஒழுங்கு விசாரணை நடத்தப்படும்.

இந்த விடயத்தில் எந்தவொரு நபருக்கும் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இலங்கை அணியின் வீரர் ஒருவர் பெண் மருத்துவ பணியாளர் ஒருவருடன் தவறாக நடந்து கொண்டதாக பல ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந் நிலையிலேயே சம்பவத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, அந்தச் செய்தி அறிக்கையின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் பொருட்டு உடனடியாக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு இலங்கை கிரிக்கெட்டின் முகாமையாளர் அசந்த டி மெல்லுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அறிவுறத்தியுள்ளது.

# இங்கிலாந்து கப்டன் கேட்ட இரு தமிழக வீரர்கள்

இங்கிலாந்து அணி கப்டன் ஆன இயன் மோர்கன் , தமிழக வீரர்களான தினேஷ் கார்த்திக் மற்றும் வருண் சக்ரவர்த்தி அணியில் நிச்சயம் தேவை என்று ஆதரவாக குரல் கொடுத்துள்ளார்.

இந்தியாவில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் ஐபிஎல் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான ஏலம் வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

இதனால் தங்கள் அணியில் இருந்து விடுவிக்கப்படும் வீரர்களுக்கான கடைசி நாள் நேற்று முன்தினம் என்பதால், அனைத்து அணிகளும் தங்கள் அணியில் இருந்து விடுவிக்கப்படும் வீரர்களின் பட்டியலை வெளியிட்டது.

அதன் படி கொல்கத்தா அணியில் இருந்து தினேஷ் கார்த்திக் நிச்சயம் விடுவிக்கப்படுவார் என்று செய்தி வெளியானது. ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் தினேஷ் கார்த்திக் மற்றும் வருண் சக்ரவர்த்தியை விடுவிக்கும் திட்டம் இல்லை என்பதை கொல்கத்தா அணி சொல்லாமல் நேற்று முன்தினம் சொல்லிவிட்டது. கொல்கத்தா அணியில் இருந்து, டாம் பான்டன், கிறிஸ் கிரீன், நிகில் நாயக், சித்தார்த் எம், சித்தேஷ் லாட் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

தினேஷ் கார்த்திக் மற்றும் வருண் சக்ரவர்த்தி அணியில் நீடிப்பதற்கு, அந்தணியின் கப்டனும், இங்கிலாந்து அணியின் கப்டனுமான இயன் மோர்கன் தான் காரணம் என்று கூறப்படுகிறது.இயான் மோர்கன் இவர்கள் இரண்டு பேரும் அணியில் இருக்கும் முக்கியமான வீரர்கள், இவர்களை வெளியேற்றக் கூடாது என்று இயான் மோர்கன் கொல்கத்தா அணி நிர்வாகத்திடம் திட்டவட்டமாக கூறிவிடவே, இவர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி இயான் மோர்கன் மற்றும் தினேஷ் கார்த்திக் இடையே ஒரு நல்ல நட்பு இருப்பதை கடந்த ஐபிஎல் தொடரில் பார்க்க முடிந்தது நினைவுகூரத்தக்கது

# மூளையில் உள்ள நியூரான்களின் எண்ணிக்கை நட்சத்திரங்களைவிட அதிகம்

இந்தப் பிரபஞ்சத்தில் மிகவும் புரியாத, புதிரான விஷயமாக மூளை இருக்கிறது. அண்மைக் காலத்தில் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகிறபோதிலும், இன்னும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, சிக்கலான அமைப்புகளைக் கொண்டதாக, இன்னும் கண்டறிய வேண்டிய ஏராளமான ரகசியங்களைக் கொண்டதாக மூளை இருக்கிறது.

ஆனால், இப்போது நாம் அறிந்துள்ள வரையில், பாகுன்டோ மேனெஸ் போல சிலர் மட்டுமே மூளையைப் பற்றி நிறைய விஷயங்களை அறிந்துள்ளனர். தனது ஆய்வுக்கான ஒரு துறையாக மூளை ஆய்வை அவர் எடுத்துக் கொண்டுள்ளார்.

அர்ஜென்டினாவில் பிறந்த மேனெஸ், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அறிவியல் துறை முனைவர் என்ற பட்டம் பெற்றுள்ளார். அறிவியல் துறையில் சிறப்புக்குரிய ஆராய்ச்சிக்கு வழங்கப்படுவதாக அந்தப் பட்டம் உள்ளது.

நியூரோ அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள சமீப காலத்து முன்னேற்றங்கள் பற்றி சாமானிய மக்களுக்குத் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்ட டி.வி. நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றிருப்பதுடன், பல புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

மேட்டியோ நிரோ என்பவருடன் இணைந்து சமீபத்தில் அவர் எழுதிய புத்தகம் ஸ்பானிஷ் மொழியில் வெளியாகியுள்ளது. அது எதிர்காலத்துக்கான மூளை (The Brain of the Future) என பெயரிடப் பட்டுள்ளது.

மூளையில் புதிய தொழில்நுட்பங்களின் தாக்கம், நியூரோ நெறிகள் போன்ற தற்காலத்தைய பிரச்னைகள் பற்றிய தகவல்கள், சமூக பிரச்னைகளில் இடைமுக வசதிகளை அறிவியல் மூலம் எப்படி அளிக்கலாம் என்பது போன்ற விஷயங்கள் அந்தப் புத்தகத்தில் விளக்கப் பட்டுள்ளன.

பெரு நாட்டில் அரெகுவிப்பா சர்வதேச கலைஞர்கள் திருவிழா கடந்த நவம்பர் 8 வரை ஆன்லைனில் நடைபெற்றது. மேனெஸ் அப்போது பிபிசிக்கு பேட்டி அளித்தார். பேட்டியிலிருந்து..

**மூளை ஏன் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது?**

தன்னைப் பற்றி தானே விளக்கம் தரக் கூடிய ஓர் உறுப்பாக இருக்கிறது மூளை

தன்னைப் பற்றி தானே விளக்கம் தரக் கூடிய ஓர் உறுப்பாக இருக்கிறது மூளை தன்னைப் பற்றி தானே விளக்கம் தரக் கூடிய ஓர் உறுப்பாக இருப்பதால் மூளை இந்த கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. இதைத் தவிர வேறு பல தனித்துவமான அம்சங்களும் மூளைக்கு உள்ளன.

நாம் மூச்சு விடுவதில் இருந்து இந்தக் கட்டுரையைப் படிப்பது வரையில், தத்துவார்த்தமான கேள்விகளைக் கேட்பது வரையில் எல்லாவற்றுக்குமே மூளை தான் காரணமாக உள்ளது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் மிகவும் புரியாத, புதிரான விஷயமாக மூளை இருக்கிறது. பால்வெளியில் உள்ள நட்சத்திரங்களைவிட அதிகமான எண்ணிக்கையில் மூளையில் நியூரான்கள் உள்ளன. (மற்ற செல்கள், தசைகள் அல்லது சுரப்பிகளுக்கான தகவல்களை எடுத்துச் செல்லும் வகையில் நரம்பு மண்டலத்தில் செயல்படக் கூடியவை இந்த நியூரான்கள்)

மூளையைப் பற்றி நமக்கு எந்த அளவுக்குத் தெரியும்?

மனித குல வரலாற்றில் முன் எப்போதும் இல்லாததைவிட, கடந்த சில தசாப்தங்களில் மூளையைப் பற்றி நாம் அதிகமான தகவல்களை அறிந்து கொண்டிருக்கிறோம்.



அவற்றில் சில: நினைவு என்பது, பொதுவான கருத்தைப் போல, நம் நினைவுகளைப் பூட்டி வைத்திருக்கும் ஒரு பெட்டி அல்ல; மாறாக நம் நீடித்த நினைவு என்பதாக உள்ளது.நம் வாழ்நாள் முழுக்க தொடர்ந்து நியூரான்கள் உற்பத்தி ஆகிக் கொண்டே இருக்கின்றன. முதுமைக் காலத்திலும் அது நடைபெறும்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று நம் மூளையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

**நாம் என்பது நமது மூளையா அல்லது உணர்வுகளா?**

இந்தப் பெருந்தொற்று நமது மன ஆரோக்கியத்தில் எதிர்மறை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மிகுந்த மன அழுத்தத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். நமது தினசரி செயல்பாடுகள் தடைபட்டுவிட்டன. நம் அன்புக்கு உரியவர்களைப் பார்த்து அச்சம் கொண்டு, விலகி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ள

நாம் வழக்கமாக செய்யக் கூடிய செயல்களை இப்போது செய்வதில்லை. நமக்குப் பழக்கம் இல்லாத விஷயங்களை செய்வதற்கு நிறைய முயற்சி தேவைப்படுகிறது.

அதுபோல, இந்தச் சூழ்நிலையால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, சமூக அழுத்தங்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. இது உளவியல பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புள்ள மற்றொரு முக்கிய காரணியாகக் கருதப்படுகிறது.

நீண்டகாலம் தனிமைப்படுத்தல் நிலையில் இருப்பது, சிகிச்சைக்குப் பிந்தைய மன அழுத்தம், உணர்வுகள் பாதிப்பு, மனச்சோர்வு, தூக்கமின்மை, பதற்றம், எரிச்சல், வெறுப்பு போன்றவற்றை ஏற்படுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதனால் தான் இரவில் நல்ல தூக்கம், ஆரோக்கியமான உணவுப் பழக்கம், புகையிலை, மது, போதை மருந்துகளைத் தவிர்த்தல் போன்ற ஆரோக்கியத்துக்கு உகந்த பழக்கங்களைக் கடைபிடிப்பது முக்கியமானதாக இருக்கிறது.

முடிந்த வரையில், குறிப்பிட்ட நேரத்தில் தூங்கச் செல்வது,குறிப்பிட்ட நேரத்தில் எழுவது, படிப்பது, உடற்பயிற்சி செய்வது போன்றவற்றை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

நமது சமூகத் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது இயல்பான மனநிலையை வளர்த்துக் கொள்ள இந்தத் தொடர்புகள் உதவிகரமாக இருக்கும். நம் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள உதவும். பல இடங்களில், நேரில் சந்திப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால், தொழில்நுட்பங்கள் இருப்பதால், அதைப் பயன்படுத்தி, தொடர்பில் இருக்கலாம்.

சில பின்னடைவுகளை நாம் குறைத்துக் கொள்ள வேண்டும்: பல மாதங்களாக பெருந்தொற்று சூழலுக்கு ஆட்பட்டுள்ள நிலையில், பழைய மாதிரியான கவனம் அல்லது ஆற்றலைக் காட்ட வேண்டும் என நாம் எதிர்பார்க்க முடியாது

### தொழில்நுட்பம்



கோ.பிரசாந், செ.சுரேஸ்
prashafbb@gmail.com
Sellathuraisuresh3@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னிதழ் வெளியீடு – சிறப்புப்பார்வை

# மின்னலாய் ஒரு மின்னிதழ் உதயம்!




காலத்தின்தேவை கருதி கல்முனையிலிருந்து மின்னல் வேகத்தில் ஒரு வார மின்னிதழ் உதயமாகியுள்ளது.

சமகால கொரோனா மற்றும் இலத்திரனியல் உலகுக்குப் பொருத்தமான மின்னிதழ் இது. கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் ஏற்பாட்டில் வாராவாரம் இம்மின்னிதழ் தொடர்ந்து வெளிவரவுள்ளது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைநாளில் இவ் வரலாற்று விழா மண்டுரையடுத்துள்ள தம்பலவத்தை ஜீவாதென்னந்தோப்பில் மனோரம்மியமான சூழலில் நடந்தேறியது.



அன்றையநாளில் மூன்று கட்டங்களாக இந்த விழா நடந்தேறியது. முதலாம்கட்டம் மின்னிதழ் அங்குரார்ப்பணம் இரண்டாம் கட்டம் ஊடகபணிக்குழு உறுப்பினர் பல்துறை வித்தகர் கா.சந்திரலிங்கத்திற்கான கௌரவிப்பு மூன்றாம் கட்டம் மூத்த தமிழ்ஊடகவியலாளர்கள் இருவர் கௌரவிப்பு என்பனவாகும்.

### மின்னிதழ்வெளியீடு

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகைநாளில் கல்முனை நெற் ஊடகவலையமைப்பினால் இந்த வாராந்த மின்னிதழ் பத்திரிகை ஆரம்பித்துவைக்கப்பட்டது.பிரதமஅதிதியாக கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணன் கலந்துசிறப்பித்தார்.

ஊடகவலையமைப்பின் ஸ்தாபகர் இளம் ஊடகவியலாளர் புவிநேசராசா கேதீஸ் வரவேற்புரை நிகழ்த்த மின்னிதழின் பிரதமஆசிரியரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் அங்குரார்ப்பணநிகழ்வு; நடைபெற்றது.

வளம் குறைந்த இடங்களிலிருந்துதான் பெரியபெரிய சாதனைகள் புரட்சிகள் உருவாக்கப்படுகின்றன. எனது வாழ்நாளில் நான் செய்த மிகப்பெரிய சத்திரசிகிச்சை ஒரு மரத்தின் கீழாகும். அதுபோல இன்று இந்தத்தோப்பில் உதயமாகும் இந்த முதல் வாரமின்னிதழ் கல்முனையின் அடையாளமாக ஆவணமாக மிளிரவேண்டும் பல தடங்களைப்பதித்து வீறுநடைபோடவேண்டும் என்று கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணன் கல்முனைநெற் மின்னிதழை ஆரம்பித்துவைத்துரையாற்றுகையில் வாழ்த்தினார்.



நிகழ்வில் சிரேஸ்ட சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் தினகரன் முன்னாள் பத்திராதிபர் க.குணராசா கல்முனைமாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் மற்றும் ஊடகவலையமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்துசிறப்பித்தனர்.

அங்கு பணிப்பாளர் டொக்டர் சுகுணன் மேலும் உரையாற்றுகையில்:

உயிருக்கு நிகரான தமிழால் இணைந்தவர்கள் நாங்கள். அந்த சுந்தரத்தமிழில் தடம்பதிக்கும் நவீன இலத்திரனியல் யுகத்திற்கு பொருத்தமான இந்த மின்னிதழ் பலதடங்களைப்பதித்து அச்சுருவாகி எமது கரங்களில் தவழவேண்டும். மேலும் சிங்களம் அல்லது ஆங்கிலமொழியிலும் வெளிவரவேண்டும்.

ஊடகப்பணி என்பது கம்பியில் நடப்பது போன்றது. அது வரமா சாபமா என்றநிலையில் பயணிப்பது. நான் வைத்திய அதிகாரியாக பெருமைப்படும் அதேவேளை ஓர் ஊடகவியலாளனாக அல்லது ஆசிரியராக வந்திருக்கவேண்டுமென உருவகப்படுத்திப்பார்ப்பதுண்டு.

இனமத பிரதேச வேறுபாடில்லாமல் பத்திரிகாதர்மம் நடுநிலைமை தவறாது எமது எண்ணம் நோக்கம் இம்மின்னிதழில் பிரதிபலிக்கவேண்டும். சிறந்த ஆசிரியர்குழாம் நல்லதொரு பணிப்பாளர் குழாம்.எனவே இக்கொழுக்கட்டை மிகவும் ருசியாக சிறப்பாக இருக்குமென்பதில்சந்தேகமில்லை. வீறுகொண்டு வெற்றிநடை போட வாழ்த்துகிறேன் என்றார்.



சிரேஸ்ட சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித் தினகரன் முன்னாள் பத்திராதிபர் க.குணராசா கல்முனைமாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோரும் உரையாற்றினர்.

### பல்துறை வித்தகர் சந்திரலிங்கம் கௌரவிப்பு

இதேவேளை கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அதி உயர்ந்த பல்துறை வித்தகர் விருதைப்பெற்ற ஓய்வுநிலை அதிபரும் ஊடகப்பணிப்பாளர்சபையின் செயலாளருமான கா.சந்திரலிங்கம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது.

ஓய்வு நிலை அதிபரான திரு.சந்திரலிங்கம் இந்த மண்ணில் பல நடிபங்குகளை வகித்துவருகிறார். கல்வியியலாளராக யோகா கலைநிபுணராக கராட்டே வீரராக இலக்கியவாதியாக சமுகசேவையாளனாக எழுத்தாளராக திகழ்ந்துவருகிறார். அவருக்கான வித்தகர் விருது முற்றிலும் பொருத்தமானதே.அவர் மேலும் பல சாதனைகளைப்படைக்க வாழ்த்துகிறேன்.

இவ்வாறு கா.சந்திரலிங்கத்தைப் பாராட்டிப்பேசிய பிரபல சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமான சபா.சபேசன் புகழாரம் சூட்டினார். முன்னதாக கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணன் வித்தகர் சந்திரலிங்கத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



எழுத்தாளர் சபா.சபேசன் மேலும் பேசுகையில்,

திரு.சந்திரலிங்கம் நிறைய நாடகங்களை தயாரித்து நடித்துள்ளார் 1971களில் அக்னி இலக்கிய கலை வட்டத்தில் பல நாடகங்களை நடித்துள்ளார். கையெழுத்துபிரதிகளில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. 1966இல்படிக்கின்றபோது கல்முனை பற்றிமா பாடசாலையில் தமிழ்போட்டிகளில் பங்கேற்று சாதனைபடைத்தார். அன்று வெளியிட்ட கதிர்என்ற சஞ்சிகையில் இன்றும் அப்பதிவைக்காணலாம்.

5ம் வகுப்பு படிக்கும்போதே றெஸ்லின் கராட்டெ சிலம்பம் கத்தடிகண்டம் மெஸ்மரிசம் போன்ற கலைகளில் ஈடுபட்டார். இலங்கை வானொலியில் 100க்கு மேற்பட்ட ஆக்கங்களைப்படைத்தவர். சக்தி ரிவியில் யோகா கலைபற்றி தொடர் நிகழ்ச்சி செய்தவர்கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இலக்கிய விமர்சனம் செய்தவர்.இந்திய தூதுவராலயத்தில் யோகா பயிற்றுனராக சேவையாற்றியவர்.

ஆரம்பத்தில் கணக்காளராகவிருந்து பின்னர் ஆசிரியர் அதிபர் என 26வருடங்கள் கல்விஉலகில் தடம்பதித்தவர். அம்பாறை மாவட்ட விபுலாநந்த புனரமைப்பு சங்கத்தின் தலைவராகவும் அது இயக்குகின்றன குருக்கள்மடம் விபுலானந்த



முதியோர் நலன்புரி நிலையத்தின் பொறுப்பாளராக கடந்த 3வருடங்களாக அருஞ்சேவையாற்றி வருகிறார்.

இப்படி பலதுறைகளிலும் தடம்பதித்து சாதனை படைத்தவர்களுக்கே இவ்வாறான வித்தகர் பட்டம் வழங்கப்படவேண்டும். அது திரு.சந்திரலிங்கத்திற்குக் கிடைத்தமை மிகப்பொருத்தமே. வாழ்த்துக்கள். என்றார்.

மூத்தஊடகவியலாளர்களுக்குகௌரவம்.

அதேவேளை அந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்த இரண்டு மூத்தஊடகவியாளர் கல்முனை நெற் ஊடகவலையமைப்பினால் கௌரவிக்கப்பட்டனர். தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் க.குணராசா மற்றும் மின்னிதழின் பிரதம ஆசிரியருமான சிரேஸ்ட ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோருக்கு கல்முனை பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் டொக்டர் குண.சுகுணன் சிரேஸ்ட சட்டத்தரணி ந.சிவரஞ்சித் மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன்மற்றும்பணிப்பாளர் சபையினர் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தனர்.

மின்னிதழின் பிரதமஆசிரியர் வி.ரி.சகாதேவராஜா பேசுகையில் மின்னிதழ் மின்னல்வேகத்தில் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றிகள் பாராட்டுகள். குறிப்பாக அழகாக மின்னிதழை வடிவமைத்தபக்கவடிவமைப்பாளருக்குவிசேட நன்றிகள். என்றார். பணிப்பாளர்சபை உறுப்பினரும் சிரேஸ்ட மருந்தாளருமான பரமலிங்கம் சந்திரமோகன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் ஊடகவலையமைப்பின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களான பா.புவிராஜ்,பரதன்கந்தசாமி ,கே.சாந்தகுமார் கே.பிரசாந்த்,மோ.கபிலன் ஆகியோரும் கலந்துசிறப்பித்தனர்.

மொத்தத்தில் அன்று பகல் 12மணியளவில் ஆரம்பமான இவ்விழா மாலை 5மணிவரை பொங்கல் விசேட விருந்துபசாரம் சகிதம் சலிப்பில்லாமல் இனிதே நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரைதீவு பிரதேச சபையில் கனல் பறக்கும் வாதப்பிரதிவாதம்!...

அங்கு அமளிதுமளி ஏற்பட்டது. அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேசசபையின் 3வது சபையின் 35ஆவது அமர்வு கடந்த வெள்ளியன்று(22) சபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் சபாமண்டபத்தில் நடைபெற்றபோதே மேற்படி அமளிதுமளி ஏற்பட்டது.

காணி நிரப்பியமை தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கையில் அதே காணியில் சட்டவிரோதமாக கொட்டகை அமைக்க முற்பட்ட வேளையில் அதைத்தடுக்கச்சென்ற பொலிசார் பொதுமக்கள் முன்னிலையில் தவிசாளர் உறுப்பினர் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தருக்கு உபதவிசாளாரால் அவமானப்படுத்தி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் சுயேச்சைக்குழு உறுப்பினர் எஸ்.சசிக்குமார் சபையில் உபதவிசாளர் எ.எம்.யாகீருக்கெதிராக ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்து உரையாற்றினார்.

அதனை வழிமொழிந்து தவிசாளர் அது தொடர்பாக தனது கருத்தைக் கூறினார். காரைதீவு எல்லைக்குள் உள்ள வயல்காணியில் சட்டவிரோதமாக தகரக்கொட்டகை அமைக்கப்படுவது தொடர்பாக எனக்கு அப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் கமநலஉத்தியோகத்தர் ஆகியோர் விடுத்த தொலைபேசி அழைப்பிற்கிணங்க அங்கு சென்றேன்.

அங்கு கொட்டகையை அவதானித்துக்கொண்டிருக்கையில் நான் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.சசிக்குமாருக்கும் பொலிசாருக்கும்; தகவல் கொடுக்க அவர்களும் வந்து சேர்;ந்தனர். அதுவரை கொட்டகை அமைத்த உதவிதவிசாளர் எ.எம்.யாகீர் அங்கு வரவில்லை.அதனிடையே பொது மக்களும் கூடினர்.

சிறிதுநேரத்தில் அங்குவந்த உபதவிசாளர் ஆக்ரோசமாக அங்கு நின்றவர்களுக்கு ஏசினார்.

இங்கு கிராமசேவைஉத்தியோகத்தருக்கோ உறுப்பினருக்கோ தவிசாளருக்கோ எந்த அதிகாரமுமில்லை. கிராமசேவையாளர் இனவாதி. எனது காணிக்குள் கால்வைத்தால் கொத்துவன் என்று மிரட்டினார். கிராமசேவையாளர் இனவாதி. உறுப்பினருக்கு இங்கு வேலையில்லை. செய்யிறதைச்செய்யுங்கள்.

மக்கள் தலைவனான என்னை பொலிசார் பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியதோடு எமது கடமையைச்செய்யவிடாமல்தடுத்ததுடன் கொத்துவன் என்று அச்சுறுத்தல் விடுத்தமை குற்றமாகும். மற்றது கிராமசேவையாளரின் கடமைக்கு இடையுறு விழைவித்தார். எனவே நாம் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாட்டை பதிவுசெய்தோம்.

மட்டுமல்லாமல் நீதிமன்றத்தில் இக்காணிஉரிமையாளருக்கெதிராக கமநலஉத்தியோத்தரால் போடப்பட்ட வழக்கை முன்நகர்வுமனுவை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றுக்கு தாக்கல் செய்தோம்.

அதன்படி (20) வழக்கு எடுக்கப்பட்டது. நாம் மன்றிற்குச் சென்றிருந்தோம். நீதிவான் சகலவற்றையும் கேட்டுக்கொண்டதன்பிற்பாடு இவ் விவகாரத்தில் தலையிட பிரதேசசபைக்கு அதிகாரமுள்ளது. எனவே அவரை(காணி உரிமையாளரை) எதிர்வரும் 26ஆம் திகதி மன்றிற்கு ஆஜராக அழைப்பாணை விடுப்பதாகக்கூறினார்.

என்று விபரித்தார்.

குறித்தபிரேரணையை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பாக வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஏற்றுக்கொள்வது என்று முடிவானது. அதன்;படி விவாதம் இடம்பெற்றபோது கனல்பறக்கும் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. சில உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்துநின்று வாதத்திலீடுபட்டனர். சபை சட்டதிட்டங்களை ஒழுங்குகளைப் பேணுமாறு தவிசாளர் பலதடவைகள் கோரியும் உறுப்பினர்கள் செவிசாய்க்கவில்லை.

இறுதியில் வாக்கெடுப்பு தொடர்பாக குழப்பிலை ஏற்பட்டதால் தவிசாளர் சபையை ஒத்திவைத்தார். எமது இனத்தின் சாபக்கேடு இது தான் என்று கூறியதுடன் அடுத்த அமர்வு பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அறிவித்தார்.

இது விடயத்தில் உபதவிசாளருக்கு ஆதரவாக குரல்கொடுத்த சுயேச்சைக் குழு உறுப்பினரொருவர் தான் இராஜினாமாச்செய்யப்போவதாக அவரது முகநூலில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் தொற்றுக்குள்ளான மாணவர்கள் சிகிச்சைக்காக அனுப்பிவைப்பு

குட்பட்ட மாவடிப்பள்ளிக் கிராமத்திலும் ஒரு பெண்மணி கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளார். இவர் கல்முனை அஸ்ரப் ஆதார வைத்தியசாலையில்(எ.எம்.எச்) சுகாதாரஊழியராக பணியாற்றிவருபவராவார். 34வயதுடைய அந்தப்பெண் ஊழியருக்கு அங்கு முதல்சோதனையில் நெகடிவ் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் பின்னர் எடுத்த சோதனையில் பொசிட்டிவ் என்று முடிவானதையடுத்து அவரும் பெரியகல்லாறு சிகிச்சைநியைத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இவருடன் காரைதீவு பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 58ஆக உயர்வடைந்துள்ளது..

டொக்டர் தஸ்லிமா மேலும் கூறுகையில்:

தொற்றுக்குள்ளான குறித்த இரண்டு மாணவர்கள் பயிலும் 3 வகுப்புகளைச்சேர்ந்த 105 மாணவர்களையும் குடும்பத்தையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளோம். அவர்களில் குறித்த 3 மாணவர்களுடன் நெருங்கிப்பழகிய மாணவர்களை எதிர்வரும் திங்களன்று(25) பிசிஆர் பரிசோதனைக்குட்படுத்த இருப்பதாகவும் அவர் கூறினார்.

தேவைப்படின் அந்த வகுப்புகளுக்கான அவசியமெனக்கருதப்படும் ஆசிரியர்களையும் பிசிஆர் செய்ய திட்டமிட்டுள்ளோம். பாடசாலை மூடப்படுவது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. கல்முனை பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளருடன் ஆலோசனை செய்தே அத்தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை இதுவரை கல்முனைப்பிராந்தியத்திற்குட்பட்ட காரைதீவுப்பிரதேசத்தில் இதுவரை 58பேருக்கு தொற்றுறுதி இனங்காணப்பட்டுள்ளது.

இதுவரை காரைதீவில் 1666பேருக்குபிசிஆர் சோதனை செய்யப்பட்டுள்ளது. நேற்றுமட்டும் 40பேருக்கு பிசிஅர் அன்ரிஜன் செய்யப்பட்டது. இறுதியாக குறித்த 2மாணவரும் மேலுமொருவருமாக 3பேர் இனங்காணப்பட்டிருந்தனர்.

மாளிகைக்காட்டைச்சேர்ந்த 25 பேர் தொற்றுக்கிலக்காகி சிகிச்சை பெற்றுவருகின்றனர். அனைவரும் ஓரிருநாட்களில் சிகிச்சைமுடிந்து வீடு திரும்பவுள்ளனர். ஏலவே 17 பேர் சிகிச்சையைபூர்த்திசெய்து வீடு வந்துவிட்டனர்.இன்னும் 36பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறுகின்றனர்.

எதுஎப்படியிருப்பினும் காரைதீவில் ஏற்பட்டுள்ள இத்தொற்றுக்கள் பரம்பலடையவில்லை மாறாக கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக அவர் மேலும் சொன்னார்.

இதுஇவ்வாறிருக்க மாணவர்கள் இவ்விதம் தொற்றுக்குள்ளானமை காரைதீவில் மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கொதிநிலையில் மட்டு.மேய்ச்சல் தரை விவகாரம்

கக்கூறும் பலர் இந்தவிடயத்தில் இன்னும் கண்டும்காணமலிருப்பது போல் இருப்பது தமிழ்மக்கள் மத்தியில் கவலையையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

குறிப்பாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டு.மாவட்ட அபிவிருத்தக்குழுத் தலைலவரும் முன்னாள் கிழக்கு முதலமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதமரின் மட்டு.அம்பாறை மாவட்ட அமைப்பாளரான வி.முரளீதரன்(கருணாஅம்மான்) ஆகியோர் இந்த விடயத்தில் மௌனம் கலைக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மக்கள் அவ்வப்போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதோடு அரசோடு இணைந்து அபிவிருத்தியையும் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் தமிழ்மக்கள் கணிசமான வாக்களித்தனர் என்பதையும் மறந்துவிடமுடியாது. இதேவேளை இவ்விவகாரம் தொடர்பாக கடந்த மாதம் பண்ணையாளர்கள் சார்பில் மேய்ச்சல்தரைஅபகரிப்பு தொடர்பாக மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவ்வழக்கு நேற்றுமுன்தினம்(22) எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் வழக்கு முடியும்வரை மேய்ச்சல்தரையினை பாவிக்க தடை செய்யக்கூடாது என்றும் பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதாகவும் சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் தெரிவித்துள்ளார்.

வழக்கு எதிர்வரும் மார்ச்மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**அரியநேத்திரனின் அறிக்கை.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர்களால் அபகரிக்கப்படும் மேய்ச்சல் தரை காணிகளை தடுத்து நிறுத்த தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று அரசாங்கத்துடன் இணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை தடுக்கவேண்டும். தடுப்பதற்கு தம்மால் முடியாவிட்டால் எங்களால் முடியாது என்பதை பகிரங்கமாக வெளிப்படையாக மக்களுக்கு கூறவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து கூறுகையில்

தென்பகுதியில் ஆட்சிக்கு வரும் சிங்களத் தலைவர்கள் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு தமிழ் பேசும் மக்களின் இனப்பரம்பரை குறைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தமை வரலாறு.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செலாளர் பிரிவுக்குட்பட்ட மயிலத்தமடுஇ மாதவனை பகுதியில் உள்ள மேய்ச்சல்தரை காணிகளை பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்கள் அபகரிப்பதனால் அப்பிரதேச கால்நடை வளர்ப்போரின் ஜீவனோபாயத் தொழிலான பால்பண்ணைத்தொழில் பாதிப்படைந்துள்ளது.

மாவட்டத்தின் எல்லை கால்நடைகளின் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணியில் அம்பாறை பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மை மக்களை குடியேற்றி விவசாயம் செய்வதற்கான காணி வழங்க ஆட்சியிலுள்ள அமைச்சர்கள் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியோரின் உதவியுடன் பௌத்த தேரர் தலைமையில் குடியேற்றம் இடம்பெறுகிறது.

இவ்விரு மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை மக்களுக்கு சேனளம் பயிர் செய்கை செய்வதற்கு என சுமார் மூவாயிரம் ஏக்கர் காணி கிழக்கு மாகாண ஆளுநர் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையில் கோரியுள்ளார். இதில் ஆயிரத்து ஐந்து நூறு ஏக்கர் காணி அம்பாறை மாவட்டத்திற்கும் ஏனைய ஆயிரத்து ஐந்து நூறு ஏக்கரும் பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்க மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் இணக்கம் தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இப்பகுதிக்கு வந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்கள் இப்பகுதிகளில் காணிகளை அபகரித்து பயிர்ச்செய்கை முன்னெடுத்துவந்த நிலையில் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசினால் முன்னாள் அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற மற்றும் கிழக்குமாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் எடுத்து நீதிமன்ற நடவடிக்கையின் போது அத்துமீறல்கள் தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும் கடந்த 2020 ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபாய ராஜபக்ஷ வெற்றிபெற்றதன் பின்னர் இரு மாவட்டங்களையும் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் மேச்சல்தரை காணியை நோக்கி அத்துமீறிய படையெடுப்பதை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் தெஹித்தகண்டிய பிரதேசத்தில் இருந்து வந்த பௌத்த பிக்குவான மகாவன்வெலா ஆரியவன்ச தலைமையிலான குழுவில் 106 குடும்பங்களுக்கு 5 ஏக்கர் காணி வீதம் விவசாய செய்கைக்கு தரவேண்டும் என கூறுகின்றார்.

இவர்கள் அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டிய பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து வந்து மட்டக்களப்பு மாவட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகப்பிரிவுக்குள் அத்துமீறி குடியேற முற்படுவதனால் மாவட்டத்தின் நிர்வாக நடவடிக்கையும் பாதிப்படைகிறது.

இப்பகுதி தங்களின் நிலம் என்றும் மாடுகளை இப்பகுதியில் மேயவிட வேண்டாம் எனவும் மாடுகளை அங்கிருந்து கொண்டுசெல்லுமாறும் பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்கள் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். அதுமாத்திரமல்ல கிழக்கு மாகாண ஆளுநர்தனக்குள்ள அதிகாரத்தைப்பயன்படுத்தி இரு மாவட்டங்களையும் சேர்ந்த பெரும்பான்மை மக்களை குடியேற்ற முழுமையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

காணிகளை விவசாயத்திற்கு வழங்கினால் பண்ணையாளர்கள் முழுமையாக பாதிக்கப்படுவதுடன் மாவட்டத்தின் பால் உற்பத்தி இல்லாமல் போவதுடன் அது அரசாங்கத்தின் சுயதொழில் திட்டங்களை வெகுவாக பாதித்து மொத்தத் தேசிய வருமானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே உடனடியாக மேய்ச்சல் தரை காணிகளை விவசாயத்திற்கு வழங்குவதை தடுத்து நிறுத்தவேண்டும்.

500 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்களின் சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளை வளர்த்துவரும் நிலையில் குடிநீர் போக்குவரது காட்டுயானை தாக்கம் மற்றும் முறையான சந்தைவாய்ப்பு யில்லை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துவரும் நிலையில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களும் நிலங்களை அபகரிக்கும் போது பண்ணையாளர்களின் வாழ்வாதாரத் தொழில் முற்றுமுழுதாக பாதிக்கப்படுகிறது.

கடந்த 07.09.2020 அன்று மாவட்டச் செயலகத்தில் மகாவலி அதிகாரிகள் பண்ணையார்களையும் அரசாங்க அதிபரையும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போதுஇ 3025 ஹெக்டர் நிலப்பரப்பு மாத்திரம் பண்ணையார்களுக்கு வழங்கப்படும் என அறிவித்தனர். இதனை பண்ணையார்கள் நிராகரித்தனர். எம்மிடம் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளதால் சுமார் பத்தாயிரம் ஹெக்டர் நிலப்பரப்பு வேண்டும் என அரசாங்க அதிபார் திருமதி பத்மராஜா ஊடாக கோரிக்கைவிடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையை நிர்ணயம் செய்து வெளி மாவட்டங்களில் இருந்துவருகைதருபவர்களைதடுக்கும் நோக்கில் கடந்த 14.09.2020 அன்று எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் வரக்கூடாது என அறிவிக்கப்பட்ட போதிலும் கடந்த வாரம் கிழக்கு மாகாண ஆளுநர் அம்மணி அனுராதாயகம்பத் திடீரென சோளம் செய்கைத் திட்டத்தை அறிவித்து அதனுடாக சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான பாரிய திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகங்களின் ஒன்றியம், தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு அமைய 30.09.2020 அன்று கொழும்பில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.பெரேரா அவர்களை சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இத்திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் இல்லை என்றால் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய போவதாக சந்திப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்வலியுறுத்தி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org